# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

டிசம்பர் 2009 ஜீவியம் 15 மலர் 8

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 2 |
| பிரைடு அண்ட் பிரஜிடிஸ் நாவலைப் பற்றிய சில சிந்தனைகள் | 3 |
| சாவித்ரி | 14 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 16 |
| லைப் டிவைன் | 22 |
| இம்மாதச் செய்தி | 32 |
| அன்பர் கடிதம் | 33 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 36 |
| அஜெண்டா | 44 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 48 |
| லைப் டிவைன் - கருத்து | 52 |
| மனிதனும் மிருகமும் | 56 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**மனிதன் காணும் நல்லது இறைவன் காணும் நல்லதாக மாற மறுக்கும்பொழுது தன் நிலையிலிருந்து தாழ்ந்து கெட்டதாக மாறும்.**

**வாங்கிக்கொள்ள ஆசைப்படுவதும், கொடுக்க ஆசைப்படுவதும், இரண்டுமே ஆசை என்ற அளவில் ஒன்றுதான்.**

**வசதியும், பிரச்சினையும் ஒரே சமயத்தில் ஏற்படுகின்றன. பிரச்சினையற்ற வசதி ஆன்ம விளக்கம்.**

**மனம் மாறினால் நடந்தவை அழிந்து நடக்க வேண்டியவை உற்பத்தியாகும்.**

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

121. *நாள் செய்வதை நல்லவர் செய்யமாட்டார்.*

✡ **சமர்ப்பணம் சாதிப்பதை நல்ல சுபமுகூர்த்தம் சாதிக்காது.**

122. *பெண்ணென்று பிறந்துவிட்டால் பெரும்பீழை இருக்கிறது.*

✡ **அன்னை என்று வந்துவிட்டால் பேர் அருளிருக்கிறது.**

123. *சூதும் வாதும் வேதனை செய்யும்.*

✡ **பக்தியும் நம்பிக்கையும் பரமனை வெல்லும்.**

124. *உடையது விளம்பேல்.*

✡ **உள்ளது உலகை வெல்லும்.**

125. *சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.*

✡ **பழக்கம் பலன் தாராது.**

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு காரியத்தை முடிக்க அதைப் பூர்த்தி செய்யும் முழு அறிவு பயன்படுவதைவிட, அதைக் கெடுக்கக்கூடிய சக்திகளை அடக்கி, விரட்டும் திறன் பயன்படும்.

***பூர்த்தி செய்வதைவிட, காப்பாற்றுவது முக்கியம்.***



# பிரைடு அண்ட் பிரஜிடிஸ் நாவலைப் பற்றிய சில சிந்தனைகள்

N. அசோகன்

1. எலிசபெத்தும், டார்சியும் தாம் விரும்பியதை அடையுமுன் படுகின்ற கஷ்டங்களை எல்லாம் பார்க்கும்பொழுது விழிப்புணர்வு இல்லாதவர்களுக்கு வாழ்க்கை அடிகொடுத்து அந்த விழிப்புணர்வு வந்தபின்னர்தான் அவர்கள் விரும்பும் அதிர்ஷ்டத்தையும், நல்லதையும் வழங்கும்என்று தெரிகிறது.
2. டார்சியும், எலிசபெத்தும் தங்களுடைய தனித்தன்மையை, உணர்ச்சிகளை வெளிக்கொட்டுவதன்மூலம் வெளிப்படுத்து-கிறார்கள்என்றால், ஜேன் அதே சமயத்தில் வேண்டாத உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் மறைத்து, அவ்வகையில் தன் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறாள்.
3. திருமதி. பென்னட், எலிசபெத், டார்சி, லிடியா, காலின்ஸ் மற்றும் லேடிகாதரின்என்று இவர்கள் எல்லோரும் வண்ணமயமான பர்சனாலிட்டி உள்ளவர்களாக இருப்பதால் கதையில் விறுவிறுப்பு ஊட்டுகிறார்கள். ஆனால் பர்சனாலிட்டி வண்ணமயமாக இருப்பது தனித்தன்மையைக் காட்டுகிறதா என்று தெரியவில்லை.
4. ஆண் பெண்ணைத் தேடுவதுதான் பொதுவாக நாமறிந்தது. பெண்ணான லிடியா ஆண்களை அதிகமாக விரும்பித் தேடுவது வழக்கத்திற்கு மாறாக இருக்கிறது. அவளுடைய தாயாருடைய உணர்ச்சிவசப்பட்ட சுபாவம்தான் இதற்கு மூல காரணமாகத் தெரிகிறது.
5. திருமதி. பென்னட் தம்முடைய மூன்று மகள்களுக்குத் திருமணம் செய்துவைத்துப் பார்க்கிறார்என்பதைக் கருதும் பொழுது, ஆர்வம் காரியத்தை முடித்துக் கொடுக்கும்என்பது தெரிகிறது. அவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறை கேள்விக்கு-ரியதுஎன்றாலும், அவர்களுடைய ஆர்வம் சாதித்ததுஎன்பது

மறுக்க முடியாதது ஆகும்.

6. அவசரமும், பொறுமையின்மையும் வேலையைக் கெடுத்து, பலனைத் தாமதப்படுத்தும்என்பது திருமதி. பென்னட் முயற்சி எடுக்கும்பொழுதெல்லாம் என்ன நடக்கிறதுஎன்பதிலிருந்து தெரிகிறது.

7. ஜேனுக்கு அதிர்ஷ்டம் வருவதற்கு முக்கியக் காரணங்கள் இரண்டு. ஒன்று, அவளுடைய தங்கை எலிசபெத்தின் அபார நல்லெண்ணம். இரண்டாவது, அவளுடைய சொந்த கட்டுப்பாடான செயல்பாடுகளுமாகும்.

8. ஜேனும், எலிசபெத்தும், ஒருவருடன் ஒருவர் ஒத்துப் போகிறார்கள். ஆனால் லிடியாவும், கிட்டியும் போட்டிப் போடுகிறார்கள். இவர்களுக்கிடையே மேரி பட்டும்படாமல் இருக்கிறாள். ஒரே குடும்பத்தில் இப்படி இருவர் ஒத்துப் போவதும், மற்ற இருவர் சண்டைபோடுவதும் ஆச்சரியமாக உள்ளது.

9. எலிசபெத்தும், டார்சியும் தம்முடைய பர்சனாலிட்டியில் சமநிலையையும், நிதானத்தையும் நிலைநாட்டும்பொழுதுதான் அவர்கள் தேடிப்போவதே அவர்களுக்கும் கிடைக்கிறது. அதுவரையிலும் அவர்கள் நாடுவது கைக்குக் கிடைக்காமல் எட்டவே போகிறது.

10. பெரும்பாலான கணவன்மார்கள் மனைவியர் மீதுள்ள பிரியத்தினால் தாமே மனைவியரிடம் சரணடைந்துவிடுவார்கள். ஆனால் திரு. பென்னட் இப்படி சரணமடைந்ததாகத் தெரியவில்லை. திருமதி. பென்னட் அதிகாரம்செய்து, அவரை அடிபணிய வைத்ததாகத் தெரிகிறது.

11. மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது எலிசபெத் டார்சியை வெறுப்பதாகத் தெரிகிறது. ஆனால் இருவரும் எதிர்பாராத விதமாக இங்கும், அங்கும் சந்திப்பதை வைத்துப் பார்க்கும் பொழுது, அவன்மேல் அவளுக்கு ஆழத்தில் நாட்டமிருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய ஆழ்மனது மேல்மனதிற்கு எதிராக இருக்கும்என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும்.



12. டார்சி முதலில் எலிசபெத்தை பொறுத்துக்கொள்ளலாம்என்று சொல்லிவிட்டு, ஒரே மாதத்தில் அவளுடைய வசீகரமான கண்களைப்பற்றிப் புகழ்ந்து பேசினான். இதிலிருந்து முதலில் ஏற்படுகின்ற அபிப்பிராயம் எவ்வளவு குறையுடையதுஎன்று தெரிகிறது.

13. ஜேனும், மற்றும் அவளது குடும்பத்தாரும் பிங்கிலியிடம் ஒன்பது மாதமாகக் காரணம் சொல்லாமல் மாயமானதுபற்றி விளக்கமே கேட்காமல்விட்டது ஆச்சரியமாக இருக்கிறது. பிங்கிலியும் தானாக முன்வந்தும் எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. திரைப்படத்தில் ஜேனுடைய காதில் பிங்கிலி இரகசியமாகச் சில வார்த்தைகள் சொல்வதைத்தான் நாம் பார்க்கிறோம். ஒரு நல்ல வரன் கிடைப்பதற்குப் பெண்கள் எவ்வளவு உதாசீனம், மற்றும் ஏமாற்றத்தைப் பொறுத்துக்கொள்கிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணமாகிறது.

14. எப்பொழுதும் குடித்துக்கொண்டும், உறங்கிக்கொண்டும் இருக்கின்ற பிங்கிலியின் சகோதரியின் கணவரான திரு. ஹர்ட்ஸ்என்பவர் பிரபு வம்சத்தினுடைய சீரழிதலுக்கு நல்ல உதாரணமாக இருக்கிறார். தான் சந்திக்கின்ற எல்லோரையும் அதிகாரம் செய்கின்ற கேத்ரின் டீ பர்க்என்ற கோமகள் பிரஞ்சுப் புரட்சியின் விளைவுகள் என்னவென்று தெரியாமலேயே நடந்துகொள்வதாகத் தெரிகிறது.

15. சார்லெட் தனக்கு ஒரு சாதாரணமான, பாதுகாப்பான வாழ்க்கை கிடைத்தால் போதும்என்று முடிவு செய்திருக்கா-விட்டால் அவளுக்கு இருந்த நல்லெண்ணத்திற்கு அதற்கு ஈடான உயர்ந்த அதிர்ஷ்டத்தை வாழ்க்கை வழங்கியிருக்கும்.

16. காலின்ஸ் தனக்கு ஏற்றவரில்லை என்று முடிவு செய்து, அவரை உதறியதால் எலிசபெத் தனக்கு லாங்க்பர்ன் எஸ்டேட் மேலிருந்த பிடியை இழக்கிறாள். ஆனால் அவள் வெளிப்படுத்திய தைரியத்தைப் பாராட்டி, வாழ்க்கை அவளுக்கு பெம்பர்லி எஸ்டேட்டையும், அவளுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ற வரனாக டார்சியையும் வழங்கியது.

17. எலிசபெத்திற்கு ஜேன்மேல் எவ்வளவு நல்லெண்ணம் இருக்கிறதோ அதே அளவுக்கு கரோலினுக்கு அவளுடைய சகோதரன் பிங்கிலியின்மேல் இருக்கிறது. எலிசபெத் பிரியப்பட்டது ஜேன் வாழ்க்கையில் நடக்கிறதுஎன்றாலும், பிங்கிலி விஷயத்தில் கரோலின் பிரியப்பட்டது நடக்காமல் போகிறது. டார்சி விஷயத்தில் கரோலின் எலிசபெத்தோடு போட்டி மனப்பான்மையுடன் நடந்து கொண்டதால், கரோலினுடைய கவனம் ஒருமுகமாக இல்லாமல் சிதறிப்போனது. எலிசபெத் ஒருமுகமாகச் செயல்பட்டு ஒரு பலனைமட்டும் தேடி வெற்றி பெறுகிறாள். ஆனால் கரோலினோ டார்சி தனக்கு கணவனாக வர வேண்டும், அதே சமயத்தில் ஜார்ஜியானா பிங்கிலிக்கு மனைவியாகவும் அமைய வேண்டும் என்று இரண்டு பலன்களுக்கு ஒரே சமயத்தில் ஆசைப்பட்டு, அதற்குரிய பர்சனாலிட்டிவலிமை இல்லாமல் தோற்றுப் போகிறாள்.

18. திருமண விஷயமாக எலிசபெத்தை டார்சி அணுகியபொழுது அவனுக்குள் ஒரு தடுமாற்றம் இருந்ததால் அவன் முயற்சி தோல்வியில் முடிகிறது. ஆனால் காலின்ஸிற்கு அப்படி ஒரு தடுமாற்றம் எதுவுமில்லை. முழுத்தீர்மானத்துடன்தான் எலிசபெத்தை அணுகுகிறான். இருந்தாலும், அவனும் தோற்றுப் போகிறான். ஆகவே திருமண விஷயத்தில் ஒருவருடைய விருப்பம்மட்டும் முடிவானதில்லை. சம்பந்தப்பட்ட அடுத்த-வருடைய மனநிலையையும் நாம் கருத வேண்டும்.

19. விக்காமுடைய குணத்தை வைத்துப் பார்க்கும்பொழுது, அவனுடன் ஓடிப்போன லிடியா அனாதையாக கைவிடப்-பட்டிருக்க வேண்டும். ஆனால் வாழ்க்கை டார்சியின் ரூபத்தில் உதவியை அனுப்புகிறது. லிடியாவிற்கு உதவுவதை, தன்னைத் திருத்திக்கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்புஎன்று எடுத்துக் கொள்கிறான். லிடியாவினுடைய குடும்பத்தினருடைய நல்லெண்ணம் அவளைச் சுற்றி ஒரு நல்ல பாதுகாப்பான சூழலாக அமைந்து, நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏற்ற



சரியான நபராக டார்சியை, சரியான நேரத்தில் எலிசபெத்தின் முன் நிறுத்துகிறது.

20. இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டியதை வெளிப்-படுத்துவது தவறாகக் கருதப்படுகிறது. ஆனால் லிடியா மறதியாக அந்த ரகசியத்தை வெளியிட்டதால்தான் டார்சிக்கு அதிர்ஷ்டமே வருகிறது. வெட்கப்பட வேண்டிய விஷயங்களை மறைத்து வைத்திருக்கும்பொழுது, அது ஒருவருடைய கௌரவத்தைக் காப்பாற்ற உதவுகிறது. ஆனால் நல்ல காரியங்களை மறைக்க முயன்று, அது முடியாமல், அவை வெளிப்பட்டாலும் இறுதியில் நல்லதே விளைகிறது.

21. வதந்திகளை நம்பிச் செயல்படுவது தவறுஎன்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு வதந்தியை முறியடிக்க லேடி காதரின் முயன்றபொழுதுதான் அதன் மூலமாக எலிசபெத் தனக்குக் கிடைக்க மீண்டும் வாய்ப்புள்ளதுஎன்பதே டார்சிக்குத் தெரிகிறது.

22. இதமான வெளிச் செயல்பாடு கொண்ட கெட்ட நபராக விக்காம் விளங்கினான். ஆனால் டார்சியோ பண்பாடற்ற வெளிச் செயல்பாடும், நல்ல உள்ளமும் கொண்ட நல்ல மனிதனாக விளங்கினான். அவனுடைய நல்ல உள்ளத்திற்கு ஏற்றபடி நல்லவிதமாக மற்றவர்களுடன் பழகியிருந்தால், முதல் சந்திப்பிலேயே எலிசபெத்தைக் கவர்ந்திருப்பான். தன்னுடைய கெட்ட சுபாவத்தை நல்ல பழக்கவழக்கத்தால் மூடி மறைக்கும் திறன் பெற்றிருந்த விக்காமிற்கு வாழ்க்கை அதற்குக் கொடுக்கும் பரிசாக அவன் கடன்களையும் தீர்த்து, டார்சியையும் சகலராக வழங்கியது.

23. இக்கதையில் நிறைய நடன நிகழ்ச்சிகள் அவ்வப்பொழுது வருகின்றன. நடன நிகழ்ச்சிகள் மகிழ்ச்சியின் அறிகுறிகளாகும். எனவே, இக்கதை ஒரு மகிழ்ச்சிகரமான முடிவோடு நிறைவடைவதில் ஆச்சரியமில்லை.

24. தான் இழந்த அதிகாரத்தைத் தம் மனைவியிடமிருந்து திரும்ப மீட்டு, இராணுவ அதிகாரிகள் யாரும் தம் வீட்டிற்கு வரக்

கூடாதுஎன்று திரு. பென்னட் அவர்கள் கட்டளை இட்ட பிறகுதான் கதையில் ஒரு நல்ல திருப்பமே வரத் தொடங்கியது.

25. தம்முடைய உறவினர் திரு. கார்டினர் லிடியாவின் திருமணத்திற்காகச் செய்த செலவுகளைத் திரும்பக் கொடுத்து விடுவதாகப் பொறுப்புணர்வுடன் அவர் முடிவு எடுக்கும்பொழுது கதையில் வந்த நல்ல திருப்பம் மேலும் நிறைவு பெறுகிறது.

26. கதையில் நடக்கும் நல்ல விஷயங்களோடு தொடர்பில்லாத காரணத்தால் லேடி காதரின் மற்றும் லேடி அன், கரோலின், திரு. மற்றும் திருமதி. ஹர்ட்ஸ் என்றிவர்கள் எல்லோரும் ஏமாற்றமும், மனக்கசப்பும் அடைகிறார்கள்.

27. தம்முடைய மகள்களின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை திருமதி. பென்னட் அவர்களைப் பொறுமை இழந்து செயல்பட வைக்கிறது. அவருடைய ஆர்வத்திற்கு வாழ்க்கை நல்ல பதில் வழங்குகிறதுஎன்றாலும், அவருடைய அவசரத்திற்குண்டான தண்டனையும் கிடைக்கிறது.

28. டார்சியின் முதல் திருமண விருப்பம் கூடிவாராமல் போனதற்கு ஒரு முக்கியக் காரணம், அந்த விருப்பத்தை ஹன்ஸ்போர்ட் காட்டேஜில் அவன் வெளியிடுகிறான். ஹன்ஸ்போர்ட் காட்டேஜ் அவனுடைய அத்தை காதரின் டீ பர்க்குக்குச் சொந்தமாக இருப்பதால், அவர்களுக்குச் சொந்தமான இடத்தில் அவர்கள் விரும்பாத திருமணத்தைப்பற்றிய இவனுடைய விருப்பம் நிறைவேறாமல் போகிறது.

29. பிட்ஸ்வில்லியம் எலிசபெத்தோடு பழகுவது டார்சியை அவசரப்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. அவசரமான செயல்பாட்டிலிருந்து எந்த நல்லதும் விளையாது. இவ்வுண்மை, தான் மணக்க விரும்பும் பெண்ணையே மனம் நோகும்படி டார்சி பேசி, திருமணத்தைக் கெடுத்துக்கொண்டதிலிருந்து தெரிகிறது.

30. டார்சி எலிசபெத்தை எந்த அளவிற்கு விரும்புகிறான்என்பது திருமதி. பென்னட்டை மாமியாராகவும், லிடியாவை மைத்துனியாகவும், விக்காமை சகலையாகவும், காலின்ஸை



உறவினராகவும் ஏற்றுக்கொள்வதிலிருந்து தெரிகிறது. ஒருவருக்காக அடுத்தவர்கள் எவ்வளவு பொறுத்துக்கொள்ள முன்வருகிறார்கள்என்பதுதான் அவர்களுடைய முக்கியத்துவத்தினுடைய அளவுகோலாக அமைகிறது.

31. டார்சி தன்னுடைய ஆணவத்தை விட்டுவிட்டு உண்மையான ஜென்டில்மேனாக நடந்துகொள்ள முன்வரும்பொழுது தான் மணக்க விரும்பும் கடைசி ஆள் இவனாகத்தான் இருக்கும் என்று சொல்லிய எலிசபெத் மனம் மாறி, தனக்குத் தெரிந்ததிலேயே சிறந்த மனிதர் டார்சிதான்என்று சொல்கிறாள்.

32. பணக்காரர்களைத் துதிபாடுவது பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் காலின்ஸ் காதரின் டீ பர்க் அவர்களை துதிப்பாடுவதில் முழுதிருப்தி அடைகிறார். நம் மனம் ஒரு விஷயத்தில் முழுவதும் லயித்துவிட்டால், அவ்விஷயத்தோடு நமக்குப் பூரண அலைன்மெண்ட் வந்துவிடுகிறது. துதிபாடுவதில் இப்படி ஓர் அலைன்மெண்ட் காலின்ஸிற்கு வந்துவிட்டதால், காதரின் டீ பர்க் எதிர்பார்த்ததுபோலவே திருமணம் செய்துகொண்டு, ஒரு நல்ல மனைவியோடு ஊர் திரும்பி, அவர்களை மேலும் மகிழ்விக்க காலின்ஸால் முடிகிறது.

33. நாம் யாரோடு பழகுகின்றோமோ அவர்களுக்கும் நம் மன நிலையும், வாழ்க்கைச் சூழ்நிலையும் பரவும்என்பது ஓர் உண்மை. டார்சியின் வாழ்க்கைச் சூழலில் அவளுடைய தங்கை ஓடிப்போக முயன்ற சம்பவம் இருக்கிறது. பென்னட் குடும்பத்துடன் டார்சி பழக ஆரம்பித்த பிறகு அவர்கள் வீட்டுப் பெண் ஓடிப்போகிற சம்பவம் நடக்கிறது.

34. டார்சி எலிசபெத்தை தீவிரமாகத் தேடியபொழுது அவள் மேலும், மேலும் அவனை விட்டு விலகித்தான் போகிறாள். இப்படி அவளைத் தேடுவதை நிறுத்தி, அமைதியாகத் தனக்குள் மனமாற்றத்தைக் கொண்டு வந்தபொழுது அவள் மனம் மாறி, அவன் மீண்டும் திருமண விருப்பத்தைத் தெரிவித்தால் தான் ஏற்றுக்கொள்வேன்என்கிறாள். மௌன சக்தியை நாம்

தெரிந்தோ, தெரியாமலோ, எப்படிப் பயன்படுத்தினாலும் நல்ல பலன் கொடுக்கிறது.

35. ஜேன் ஆஸ்டின் இந்தக் கதையை நோபல் பரிசு துவக்கப்பட்ட-தற்குபின் எழுதியிருந்தால், கதை வெளியான ஒரு சில வருடங்களிலேயே இலக்கியத்திற்கான அப்பரிசை நிச்சயம் வென்றிருப்பார்.

36. லிடியா ஓடிப்போன சமயம் அதிர்ஷ்டம் ஆபத்தின் ரூபத்தில் வருகிறதுஎன்று அவளுடைய குடும்பத்தாரால் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? நம்முடைய மேல்மனமும், ஆழ்மனமும் எதிரான செயல்பாடுகளைக் கொண்டிருப்பதால் இப்படி அதிர்ஷ்டம் ஆபத்துஎன்று தலைகீழாக வருகிறது.

37. கதையில் வரும் கதாபாத்திரங்கள் தம்மைத் தாம் புரிந்து கொள்வதைவிட நாம் அவர்களை நன்றாகப் புரிந்து கொள்கிறோம். காலின்ஸ் துதிபாடுகிறான், திருமதி. பென்னட் அவசரப்படுகிறாள், லிடியா உணர்ச்சிவசப்பட்டுச் செயல்-படுகிறாள், பிங்கிலி மனஉறுதி இல்லாமல் இருக்கிறான், மற்றும் ஜேன் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தத் தெரியாமல் இருக்கிறாள்என்பவற்றை எல்லாம் நாம் கவனிக்கிறோம். ஆனால், தாம் இப்படி இருக்கிறோம்என்று இவர்களுக்கெல்லாம் தெரியவில்லை. இதுவே நமக்கும் உண்மையாகும். நம்மோடு உறவாடுகின்ற மற்றவர்கள் நம்முடைய குறைகளைத் தெரிந்து கொள்வார்கள். ஆனால் அதே அளவிற்கு நாம் நம் குறைகளை உணர்வதில்லை. நாம் நம்மோடு ஐக்கியமாகிவிடுவதால் நம்மை நாமே முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். அதனால் நம் குறைகள் நமக்கே தெரிவதில்லை.

38. விக்காமுடைய இதமான நடத்தை எலிசபெத்தை மகிழ்விக்-கிறது. அதே சமயத்தில் டார்சியினுடைய பண்பாடற்ற நடத்தை அவள் மனதைப் புண்படுத்துகிறது. விக்காமுடைய இனிமையான நடத்தை அவனுடைய குறைகளை அவள் கண்ணிற்குத் தெரியாமல் மறைக்கிறது. அதே சமயத்தில் டார்சியினுடைய உதாசீனம் அவனுடைய நல்ல சுபாவத்தை



இவள் உணர முடியாமல் செய்கிறது. வெளிநடத்தைஎன்பது மேலோட்டமான ஒன்றுஎன்றாலும், அவை இந்த அளவுக்கு நல்ல அபிப்பிராயம் மற்றும் கெட்ட அபிப்பிராயங்களை உண்டுபண்ணக்கூடியது.

39. Life-Response நியதிகளின்படி பார்த்தால் ஒரு வாய்ப்பை நாம் மறுக்கும்பொழுது நம் வாழ்க்கை அந்த அளவிற்குச் சுருங்க வேண்டும். ஆனால் டார்சி திருமண வாய்ப்பை வழங்கிய பொழுது எலிசபெத் அதை மறுக்கிறாள். இருந்தாலும், அதே வாய்ப்பு திரும்ப வருகிறது. அதை ஏற்றுக்கொள்ளும் பொழுது எலிசபெத்தின் வாழ்க்கை முன்னைவிடச் சிறப்பாக மலர்கிறது.

40. டார்சி தன்னை அவமானப்படுத்தியதை எலிசபெத் பெரிதாக எடுத்துக்கொண்டு, மனம் வருந்தி, புழுங்கிக்கொண்டிருக்-காமல், அதைப்பற்றி நகைத்துப் பேசுகிறாள். இப்படிப் புழுங்குவதற்குப் பதிலாக நகைத்துப் பேசுவது ஒரு மன வலிமையைக் காட்டுகிறது. வாழ்க்கை அந்த மன வலிமையைப் பாராட்டி, அவமானப்படுத்திய அதே டார்சியை அவளைப் புகழ்ந்து இறுதியில் பேசும்படிச் செய்கிறது.

41. விக்காம் தன் இதமான பழக்கவழக்கங்களால் வெற்றி பெறுகிறான். காலின்ஸ் தன்னுடைய எஜமானியை சந்தோஷப்-படுத்த வேண்டும்என்ற முடிவில் இருக்கும் பலத்தால் வெற்றி பெறுகிறான். ஜேன் மௌன சக்தியால் வெற்றி பெறுகிறாள். டார்சியும், எலிசபெத்தும் மனமாற்றத்தாலும், திருமதி. பென்னட்டும், லிடியாவும் அறிவில்லாமல் செயல்பட்டாலும், ஆர்வத்தின் வேகத்தாலும், பிங்கிலி டார்சியின் ஆசீர்வாதத்-தாலும் வெற்றி பெறுகிறார்கள்.

42. லிடியா ஓடிவிட்ட அந்த நெருக்கடியான நேரத்தில் அவளுடைய குடும்பத்தினர் எல்லோரும் நிதானமிழந்துவிடுகிறார்கள். ஆனால் டார்சி வெளிமனிதனாக இருப்பதால் நிதானம் இழக்காமல் செயல்படுகிறான். அந்த நிதானத்தின் பலத்தால் தான் அவனால் ஓடிப்போனவர்களைக் கண்டுபிடித்து,

பிரச்சினையைத் தீர்க்க முடிகிறது.

43. பென்னட் குடும்பத்தில் நடந்த மூன்று திருமணங்கள், எலிசபெத் மறுத்தபிறகு காலின்ஸின் கவனத்தை திருமதி. பென்னட் மேரியின் பக்கம் திருப்பியிருந்தால் நான்காக மாறியிருக்கும்.

44. தன்னுடைய தங்கை ஜார்ஜியானா அவளுடைய பொறுப்பாளரின் பாதுகாப்பில் பத்திரமாக இருக்கிறாள் என்று டார்சி நினைத்திருந்தான். அதுவே அவனுடைய அஜாக்கிரதைக்குக் காரணமாகி, விக்காமின் ரூபத்தில் ஜார்ஜியானாவிற்கு ஆபத்தாக வந்துவிட்டது.

45. நெருக்கடிகள்தாம் முன்னேற்றத்திற்கு மிகவும் விரைவான வழி என்பது அன்னையின் கூற்று. லிடியா வீட்டைவிட்டு ஓடிப்போனது பென்னட் குடும்பத்திற்கு அதிர்ஷ்டமாக மாறியதிலிருந்து இந்த உண்மை நிரூபணமாகிறது.

46. காலின்ஸை, திருமணம் செய்துகொள்வதற்குப் பதிலாக, டார்சியைத் திருமணம் செய்துகொள்வதால் ஆதாயத்தைத் தேடாமல், அன்பிற்காகத் திருமணம் செய்துகொள்வதாக எலிசபெத் நம்புகிறாள். ஆனால் அன்பிற்காகத் திருமணம் செய்துகொள்வது எலிசபெத்தைவிட டார்சிக்குத்தான் பொருந்தும். ஏனென்றால், பெம்பெர்லி மாளிகையைப் பார்த்த பின்புதான் டார்சியைத் திருமணம் செய்துகொள்ளலாம்என்ற எண்ணமே அவளுக்குத் தோன்றியது.

47. விக்காமுடைய சுயரூபத்தை மேரி கிங்கும், அவளுடைய தகப்பனாரும் வெகுவிரைவில் புரிந்துகொள்கிறார்கள். ஆனால் அவனுடைய இதமான நடத்தையால் மகிழ்ந்துபோன எலிசபெத்தும், அவருடைய குடும்பத்தினரும்தான் வெகு நாட்களாக அவனைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்.

48. வழக்கறிஞரின் மகளான திருமதி. பென்னட்டை மணந்து கொள்ள திரு. பென்னட் தம் நிலையிலிருந்து கீழிறங்கி வந்தார். ஆனால் அவ்வாறு இறங்கி வருவது அவருடன் நின்று விடுகிறது. அவருடைய முதல் இரு பெண்களும், அவர்களுடைய நிலையிலிருந்து உயர்ந்த நிலையில்தான் திருமணம் செய்து



கொள்கிறார்கள். இதை வைத்துப் பார்க்கும்பொழுது, இடையில் அவர்களுடைய குடும்பத்தினுடைய அந்தஸ்து உயர்ந்து உள்ளதாகத் தெரிகிறது. எது இந்தக் குடும்பத்தின் அந்தஸ்தை உயர்த்தியதுஎன்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

49. மனோபாவங்களை மாற்றிக்கொள்ளும்பொழுது இழந்த வாய்ப்பு மீண்டும் வரும்என்பது டார்சி உண்மையான gentlemanஆக மாறும்பொழுது எலிசபெத் மீண்டும் அவன் வாழ்க்கைக்குள் வருவதிலிருந்து தெரிகிறது.

50. காமெடி நாவல்களைவிட சோகமயமான நாவல்கள்தாம் வாழ்க்கையின் ஆழ்ந்த உண்மைகளை வெளிக்கொண்டுவரும் என்று நம்பப்படுகிறது. ஆனால் ஜேன் ஆஸ்டினுடைய அற்புதமான மற்றும் ஆழ்ந்த பார்வையின் காரணமாக மனித சுபாவத்தின் சிறப்புகளை எடுத்துக்காட்டுவதில் இந்த Pride and Prejudice நாவலானது மற்ற சோகமயமான நாவல்களைவிட, சிறந்து நிற்கிறது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு கட்சி தன் பரம வைரியைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது, அன்னையின் சக்தி செயல்படுவதாகும். அது போன்ற செயல்கள் அன்னையின் ஆட்சியில் ஆன்மீக உண்மையைச் சுட்டிக்காட்டும் அறிகுறியாகும்.

***ஆன்மீக உண்மையைச் சுட்டிக்காட்டும்***
***அன்னையின் அறிகுறி.***

## P.107 Till even earth's mud grows rich and warm with the skies

### பூமியின் மண் வானத்தால் செறிந்தடையும் சிறப்பு

- ✡ ஆத்மா அழியும்பொழுதும் பெருமை பொலிவு பெறுகிறது
- ✡ தவறு ஆரம்பிக்குமிடத்தில் ஞானம் உற்பத்தியாகிறது
- ✡ மண்மூடியின் விகாரம் அதன் அழகான அலங்காரம்
- ✡ கொடுமையின் கதையே கவியின் இலக்கியம்
- ✡ சிருஷ்டிக்கும் சத்தியம் குவிந்த மோட்சம்
- ✡ பிரபஞ்ச சுமுகத்தின் கனவுகளினூடே
- ✡ கரையும் ரூபங்கள் கலைத்தெழும் குழப்பம்
- ✡ ஜட இருளின் அஸ்திவாரத்துள் மூழ்கி தன்னையிழந்தது
- ✡ ஜடம் பிறந்த வரலாறு இலட்சியம் அழிந்த பாதை

- ✡ இறைவன் இருளில் மூழ்கி இழந்த அதிசயம்
- ✡ அவலமான இவ்வுலகம் ஆத்மாவுக்குரிய தாலாட்டு
- ✡ மறைந்த மகிமை உறைந்த புனிதம்
- ✡ அர்த்தமற்ற சூன்யத்தில் பிறந்த புருஷன்
- ✡ உலகைச் சூழ்ந்த காரிருள் வாழ்வாக எழுந்தது
- ✡ மனமழிந்த உறக்கம் மருண்டெழுந்த ஜீவியம்
- ✡ உயிரற்ற உறுதி ஆட்டுவிக்கும் ஆட்டம்
- ✡ இழிந்த ஜடம், இருளான வெறுப்பு, செறிந்த செத்த உணர்வு
- ✡ ஜீவனற்ற உறக்க மயக்கத்தில் ஆழ்ந்தொளிந்து



- ✡ சிருஷ்டிக்கும் பூமியின் வலிமையிழந்த தூக்கம்
- ✡ ஆழ்ந்த மனம் ஏங்கி நினைவு கூர்ந்தது
- ✡ பிறப்பதன்முன் இறந்த மகிழ்ச்சி நின்றது
- ✡ சொரணையற்ற நெஞ்சில் சொக்கி நிற்கும் சொர்க்கம்
- ✡ சகதியில் விளையும் ரோஜாவும் மலர்களும்
- ✡ பார்வையற்ற பாத்திரத்தினின்று ஜனிக்கும் லாவண்யம்
- ✡ பிறந்த அழகு பெரிய இடத்திற்குரியது
- ✡ இது அது பிதிராஜ்யமாகப் பெற்ற விதிக்கப்பட்ட சட்டம்
- ✡ கொலை செய்யப்பட்ட கடவுளின் பொன்னான கொடையென
- ✡ சிறைப்பட்ட ஆத்மாவின் பார்வையிழந்த சக்தி
- ✡ அழியாத கடவுளின் அழியும் பாகங்கள்
- ✡ இழந்த பகுதிகளின் தொகுப்பில் எழவேண்டும்
- ✡ எங்கோ செல்லும் பத்திரத்தை எடுத்து எழுதி
- ✡ இறைவனின் உரிமைக்கு, சொந்தத்தின் ஐயம்
- ✡ மிச்சம் அவளது சொச்சம்
- ✡ அவள் மண்குவியல் மறைத்துள்ள மலையான பொருள்கள்

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மேலே போகும்பொழுது அனுபவம் நின்றால், அறிவு ஆரம்பிக்கும்.

கீழே வரும்பொழுது அனுபவம் பூர்த்தியானால், கல்வி பூர்த்தியாகும்.

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **முன்னுக்கு வரும் ஆர்வம்**
**(Aspiration to rise in the society)**

❀ பணம்எனில் பிணமும் வாய் திறக்கும், பணம் பாதாளம் வரை பாயும்என்பவை, பணம் சமூகத்தில் சக்தி வாய்ந்தது என்று காட்டுகிறது.

உலகில் பணத்தால் செய்ய முடியாதது இல்லை.

போரை வெல்லவும், அரசனை அணுகவும், எவரிடம் எதையும் சாதிக்கவும், அன்பைப் பெறவும் பணத்தால் முடியும்.

மனிதன் உயிரைவிட்டுப் பெறமுயல்வது அன்பு. அதைக் காதல்பரிசுஎன்கிறான்.

அதையும் பணத்தால் பெற முடியும்என்று கண்டால், பணம் பிரதானமாகிறது.

✯ நாலுபேர் சேர்த்துக்கொண்டால் வாழ்வு, இல்லையேல் இல்லை.

'செல்லாது அவன் வாயிற் சொல்',

'இல்லாளும் வேண்டாள்'.

பணம் அன்பைப் பெறுகிறது. பணம் உள்ளவர் மீது 'அன்பு' இயல்பாக எழுவதைக் காணும்பொழுது அன்பை நாடுபவனுக்கும் பணத்தின் மதிப்புத் தெரிகிறது.

✯ பணத்தால் பெற்ற அன்பு, அன்பில்லைஎன்று அறிய அதிக நாளாகிறது.



✯ பணமும் தோற்றபின் நெஞ்சு விம்மும் நிறைவின் அதிசயம் மனிதகுல இலட்சியமாக நிற்கிறது. அது காதல் எனப்படும்.

✯ வாழை, குலை தள்ளுவதைப் போல் நெஞ்சு ஒரு முறையே திறக்கும்.

இரண்டாம் முறை வாழை குலை தள்ளுவதில்லை.

✯ பாசம் (passion) என்பது உடலின் வேகம்.

காதல்என்பதும் உணர்வின் வேகமாகும்.

அது புனிதமானாலும் க்ஷணத்தில் அழிவது - ரோமியோ, ஜூலியட் (Romeo and Juliet).

அன்றிலிருந்து இன்றுவரை உலகம் நாடும் ஒரே இலட்சியம் காதல்.

பியாட்ரிஸ்க்கு (Beatrice) 9 குழந்தைகள் பிறந்த பின்னும் டாண்டே (Dante) அவன் காதலை (epic poetry) பெருங்காவியமாக எழுதினான்.

காதல் உடலால் பூர்த்தியாகாது, பாசத்தால் (passion) பூர்த்தியாகாது.

காதலின் இலட்சியம் சரணாகதி.

சரணாகதியில் பூரணம்பெற சிறுஇலட்சியங்கள் (finite goals) இடம் தாராது.

**அனந்தமான பிரம்மம் மட்டுமே சரணாகதியை ஏற்க முடியும்.**

காதலை அனுமதிக்க சிறுகுடும்பம் இடம் தாராது.

காதல்எனும் கப்பல் கடலில் தன்னைச் செலுத்தும்.

ஏரி பெரியதானாலும் கப்பலுக்கு அங்கு இடமில்லை.

## ✡ மனிதசுபாவம் தானே மாறாது

❀ மனிதசுபாவம் மாறும்என எதிர்பார்ப்பவர் இலவு காத்த கிளியாவர்.

❀ சிறிய மனிதன் பிடியை விட்டுக்கொடுக்கமாட்டான்.

❀ பெருமைக்காகப் பொய் சொல்பவர் உயிர் உள்ளவரை மாறமாட்டார்.

❀ தமக்கு, தம் குடும்பத்திற்கு, தம் ஜாதிக்கு, தம் ஊருக்கு, தம் படிப்புக்கு இல்லாத பெருமையை இருப்பதாக நினைப்பவர், பேசுபவர் கடைசி வரை மாறி உண்மையைப் பேசமாட்டார்.

❀ நிலைமை மாறினால் மாறுபவன் மனிதனில்லை.

❀ சாப்பாட்டில் விஷமம் செய்பவர் சமையலறையில் உள்ளவரை விஷமத்தை நிறுத்தமாட்டார்.

❀ பொறுப்பற்று பிறர் பொருளை அழித்து மகிழ்பவர், அழிப்பதை நிறுத்தமாட்டார்.

❀ பணக்காரனைக் கண்டு உடலெல்லாம் சுருங்கி குழைபவ-ராலும் அப்பழக்கத்தை விடமுடியாது.

❀ தீங்கு செய்து ஆனந்தப்படுபவர் தீங்கு செய்வதால் உள்ளனவெல்லாம் போகும்எனத் தெரிந்தாலும், அவரால் தீங்கு செய்யாமலிருக்க முடியாது.

❀ பிறரைக் குறைவாகப் பேசி இன்பம் காண்பவர், பெரு நன்மையைப் பெற்ற நேரத்திலும் அதை விடமுடியாது.

❀ கயவன் கடவுளிடமும் கயமையை நிறுத்தமாட்டான்.

❀ துரோகம் செய்பவன் உற்ற நண்பனுக்கும் துரோகம் செய்வதை நிறுத்தமாட்டான்.

❀ கிராக்கி செய்பவர் சந்தர்ப்பத்தை நழுவவிட்டதாகச் சரித்திரம் இல்லை.

❀ புரளியை பாதிக்கப்பட்டவரிடமே நேரடியாகப்பேச புரளி பேசுபவர் தயங்கமாட்டார்.



❀ முயலுக்கு மூன்று கால்என்ற கதை தமிழ்நாட்டில் பிரபலம். அனைவரும் அறிந்தது. என்றாலும் அக்கதையை இன்னும் ஒரு முறை சொன்னால் மிகையாகாது.

❀ பயந்தவன் I.G. பதவி வந்த பிறகும் பயப்படுவான்.

❀ மனைவிக்கு அடங்கியவன் மானம்போகும் நேரத்திலும் அவளுக்கு அடங்குவான்.

❀ பெரிய இடத்தில் போய் பிழைக்க விருப்பப்பட்டவன் சின்ன புத்தியுள்ளவன், திறமைசாலி. தாய்மாமன் அழைத்துப்போய் 1 மாதம் கழித்து அனுப்பிவிட்டார். 51 பஸ் வைத்திருந்த முதலாளி அழைத்துப்போய் அடுத்த மாதம் அனுப்பிவிட்டார். அன்பர் அழைத்து வந்தார். முன் இரண்டு இடங்களிலும் செய்த அட்டூழியத்தை இங்கும் செய்யத் தவறவில்லை. 12 ஆண்டு தவறாமல் அழிச்சாட்டியம் செய்து பிறகு தானே விலகினான்.

❀ ஒருவர் பொருளை அடுத்தவரிடம் எவரும் தருவதில்லை. கிடைத்தால் ஆர்வமாக அழிப்பவர் சிலர். அப்படிப்பட்டவரிடம் அன்பர் கொடுத்த கம்பனியை அழித்து, 1/3 பாகமாக்கி, அதனால் தாம் முழுவதும் அழிந்தபின், அப்பழக்கத்தை அவரால் விடமுடியவில்லை.

❀ கடன் வாங்கித் தாராதவன், எவ்வளவு பணம் வந்தாலும் தானே கடனைத் திருப்பித்தர முன்வரமாட்டான்.

**நிலைமை மாறினால் இவரனைவரும்**
**நிமிஷத்தில் மாறுவார்கள்.**

## ✡ நம் மாடு நம் பயிரை மேயும்

❀ இது மாட்டின் குணம்.

❀ இந்த குணமுள்ள மனிதருண்டு.

❀ அவர்கட்கு வெட்கம் இருப்பதில்லை.

❀ தடுப்பாரில்லைஎனில் தாராளமாகச் செயல்படுவார்கள்.

❀ நாள் வருஷமானாலும், தம் பழக்கத்தை மாற்றமாட்டார்கள்.

❀ எத்தனை வருஷமாகத் தினசரி ஹோட்டலில் சாப்பிடும் நண்பர்களில் ஒருவர் மட்டும் பில் கொடுக்காவிட்டாலும், அடுத்த முறையும் அவருக்கு அந்த பில்லைக் கொடுக்கத் தோன்றாது; வெட்கம் இருக்காது.

❀ 'நீங்கள்' என்று பேசுவதற்குப் பதிலாக 'நீ' எனப் பேசுபவருக்கு அனைவரும் மரியாதையாகப் பேசும் ஊருக்குப் போனாலும் 'நீ'தான் வரும், 'நீங்கள்' வாராது.

❀ 'என்னிடம் கொடுத்த பணத்தை வாங்கிவிடுவாயா?' எனச் சவால் விடுபவன் கயவனிலும் மட்டமானவன்என்று அறியாதவருண்டு.

❀ தன் கையில் பிடி வந்தபின் 'அந்தப் பிடியை விடும்அளவுக்கு எனக்குப் பெரிய மனமில்லை' என்று கூறி, பிடியை விடமாட்டான்.

❀ 50 பைசா செலவு செய்தால் அடுத்தவர் தமக்காக 1½ மைல் நடக்க வேண்டாம்எனத் தெரிந்து, செலவு செய்யாதவர் மனிதரில்லை. அதை 6 மாதமாகவும் ஒருவர் செய்தார்.

❀ தம் ஸ்தாபனம் ஆரம்பிக்கும் திட்டங்களைத் தாமே எதிர்க்கக்கூடாதுஎன்று தெரியாமல், 30 வருஷம் 30 திட்டத்தை எதிர்த்தவருண்டு.

❀ கடமையில்லாமல் 10 வருஷமாக மாதாமாதம் பெருந்தொகை கொடுத்து உதவுபவரைக் காரணமில்லாமல் திட்டினால் நடுத்தெருவில் நிற்க வேண்டும்என்று தெரிந்தாலும், வீறாப்பு அடங்காது, திட்டும்.

❀ 50 ரூ. வருமானமில்லாதவர்க்கு 5000 ரூ. வருமானம் பெற உதவியவரிடம் தன் 'பெரிய மனிதத்தன்மை'யைக் காட்டக் கூடாதுஎன 70 வயது வீர சைவ பிரம்மச்சாரிக்குத் தெரியவில்லை.



❀ இவர்கள் நாகரீகமற்றவர், அநாகரீகமானவர், இவர்களிடம் பழகக்கூடாது. சில ஊர்களே முழுவதும் இப்படியிருக்கும். அங்கு வாழும் சந்தர்ப்பம் மனிதனுக்கு வரக்கூடாது. அது பாவம்.

நிலைமை மாறியவுடன் இவர்கள் குரல் மாறும், முகம் மலரும், உடல் குழையும், உள்ளம் நெகிழும், வெட்கம் எழாது.

இப்படிப்பட்டவர் கணவராக அமைவது அன்பருக்குத் திருவுருமாறும் வாய்ப்பு. அவர்கள் மாறமாட்டார்கள், நாம் திருவுருமாற கட்டாயம் அவர்கள் உதவுவார்கள்.

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஆன்மீகம் மத வழிபாட்டுக்கு அடுத்த 'தலைமுறை'யாகும்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உயிராகத் தேடும் பொருளைக் கிடைக்கும் நேரத்தில் 'மறுக்கும்' குணம் மனுதனுக்குண்டு. பிறருடன் தானும் ஒன்றேஎன்ற இயல்பான உணர்வும், கிராக்கி மனப்பான்மையும் முரண்படுவதால் ஏற்படும் விளைவு இது.

***உயிர் போன்றதை மறுக்கும் மனித இயல்பு.***

***நாடும் பரமாத்மா, மறுக்கும் ஜீவாத்மா.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIX. Life

The problem of Life in matter was recently experimented upon. Page No.178 Para No.10

It throws an intense light on the problem.
If those conclusions are accepted, it is so.
It was done by a great Indian scientist.
It was on response to stimulus.
He points it out as an infallible sign of existence of life.
This phenomenon has many subtle functionings.
His data illumined the functionings.
It is a phenomenon of plant life.
Vitality is the essential point.
Its positive state is life.
Its negative state is death.
The same proof in metals has been given.
It is the same as in the plant.
An identical organisation of life in metal as well as plant could still be there.
Not indeed with the same abundance.



## 19. வாழ்வு

ஜடத்தில் உயிருள்ளதுஎன்பதை சமீபத்தில் சோதனை செய்தனர்.

சோதனை விஷயத்தை மிகத்தெளிவு செய்கிறது.
இதன் முடிவை ஏற்றால், அப்படியே கூற முடியும்.
இதை ஒரு பிரபல விஞ்ஞானி செய்தார்.
புறத் தூண்டுதலுக்கு உரிய உணர்ச்சியைச் சோதனை செய்தார்.
இது உயிருள்ளதுஎன்பதை மறுக்க முடியாதபடி காட்டுகிறது என்கிறார்.
இந்த விஷயத்தில் பல சூட்சுமங்கள் உள.
அவர் விஷயங்கள் செயலை விளக்குகின்றன.
இது தாவரத்தின் உயிர்.
உயிர் முக்கியம்.
உயிர் வாழ்வின் உயர்ந்த நிலை.
மரணம் அதன் தாழ்ந்த நிலை.
இதே சோதனையை உலோகத்தில் செய்யலாம்.
உலோகமும் தாவரமும் ஒன்றே.
இரண்டிலும் உயிர் ஒன்றுபோல இருக்கும்.

தாவரத்திலுள்ள அளவுக்கு இருக்காது.

Not indeed to show the exact identity.
Instruments could be invented.
It could be the right nature.
It could be sufficiently delicate.
More points of similarity between metal and plant can be shown.

It may be proved not to be so.
What does this mean?
It means the same organisation is absent.
But the beginnings of vitality could still be there.
The symptoms may be rudimentary.
They are symptoms of life.
If it exists in the metal, something must be admitted.
Some material existences are perhaps involved.
They are akin to the metal.
Maybe they are involved.
Maybe they are elementary or elemental in the earth.
This must be admitted.
We can pause and inquire further.
We are not obliged to stop short.
Our immediate means may fail us.
We enjoy an unvarying experience of Nature.
From that we may be sure.
Investigation thus pursued will in the end prove to us that there is no break.
There is no rigid line of demarcation between the earth and the metal formed in it.
Or a line between the metal and the plant is there.
There is none between the elements and the atoms.
It will be clear pursuing the synthesis further.



இரண்டும் ஒன்றேஎன்று தெளிவாகக் காட்டாது.
புதிய கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.
அவை பொருத்தமாக இருக்க வேண்டும்.
அவை துல்லியமாக இருக்க வேண்டும்.
அப்படியிருந்தால், தாவரத்திற்கும் உலோகத்திற்கும் அதிக ஒற்றுமை காட்ட முடியும்.
காட்ட முடியாமற் போகலாம்.
இதன் பொருள் என்ன?
இரண்டிலும் இருப்பது ஒன்றேயில்லைஎன ஆகும்.
எனினும் உயிரின் ஆரம்பம் இருக்கும்.
அடையாளம் கொஞ்சமாக இருக்கலாம்.
ஆனாலும் அவை உயிருக்குள்ள அடையாளம்.
அதுவே உலோகத்திலிருந்தால், நாம் ஒன்றை ஏற்க வேண்டும்.
ஜடவாழ்வு ஒருவேளையிருக்கலாம், மறந்திருக்கலாம்.
அது உலோகத்தில் உள்ளதுபோலிருக்கும்.
அவை மறைந்திருக்கலாம்.
அடிப்படையானதாக இருக்கலாம்.
இதை ஏற்க வேண்டும்.
சற்றுப் பொறுத்து விசாரிக்கலாம்.
இங்கே நிற்க வேண்டும்என்ற அவசியமில்லை.
நம் சோதனைகள் பலிக்காமற் போகலாம்.
நாம் இயற்கையை நிதானமாக அனுபவிக்கிறோம்.
அது நமக்குத் தெளிவுபடுத்தும்.
ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் முடிவில் இடைவெளியில்லை என்பது தெரியும்.
மண்ணுக்கும், அதிலிருந்து வரும் உலோகத்திற்கும் இடையே எல்லைஎன்பதில்லைஎனத் தெரியும்.
தாவரத்திற்கும் உலோகத்திற்குமிடையேயும் எல்லையில்லைஎனத் தெரியும்.
அணுக்களுக்கும் பஞ்சபூதங்கட்குமிடையேயுமில்லை.
ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் அது தெளிவாக இருக்கும்.

There is no demarcation between the elements and the atoms that constitute the earth,
And the metal or the earth they constitute.
Each is a step of a graded existence.
Each prepares the next.
Each holds in itself the substance of the next.
It appears in that which follows it.
Life is everywhere.
It is secret or manifest.
It is organised or elemental.
It is involved or evolved.
It is universal, all-pervading.
It is imperishable.
Only its forms and organisings differ.

There is a physical response to stimulus. Page No.179
It is only an outward sign of life. Para No.11
It is so with our breathing and locomotion.
An exceptional stimulus is applied by the experimenter.
Vivid responses are given to it.
It can at once be recognised as indices of vitality.
It is the object of our experiment.
The plant is responding all its existence.
The response is constant.
It responds to a constant mass of stimulation.

The stimulation is from its environment.
It can be explained in other words.
There is a constantly maintained force in it.
It is capable of responding.



பஞ்ச பூதங்களும் அணுவும் பூமியாகும்.
இவற்றிடையே பேதமில்லை.
உலோகமும், மண்ணும் அணுவாலும் பூதங்களாலும் ஆனவை.
படிப்படியான வாழ்வில் ஒவ்வொன்றும் ஒரு படி.
ஒவ்வொன்றும் அடுத்ததைத் தயார் செய்யும்.
அடுத்ததின் கரு முந்தையதில் உள்ளது.
வருவதில் அது தெரியும்.
வாழ்வு எங்கும் உள்ளது.
அது வெளிப்படையாகவோ, இரகஸ்யமாகவோ இருக்கும்.
அது உருவம் பெற்றிருக்கும், பெறாமலிருக்கும்.
அது மறைந்திருக்கும் அல்லது வெளிப்படையாக இருக்கும்.
அது பிரபஞ்சத்திற்குரியது, அனைத்தையும் ஊடுருவக்கூடியது.
அது அழிவற்றது.
அதன் ரூபமும் உருவகமும் மாறலாம்.

தொடு உணர்ச்சிக்குப் பதிலுண்டு.
இது உயிரிருப்பதற்கு வெளிப்படையான அறிகுறி.
நாம் நடப்பதும், மூச்சு விடுவதும் அப்படிப்பட்டதே.
ஆராய்ச்சியாளர் ஒரு சிறந்த உணர்ச்சியைக் கிளப்புகிறார்.
தெளிவான பதில் தெரிகிறது.
உடனே அது உயிரின் அடையாளம்எனத் தெரியும்.
அதுவே நம் சோதனையின் நோக்கம்.
செடி வாழ்நாள் முழுவதும் உஷாராக இருக்கிறது.
தொடர்ந்து செயல்படுகிறது.
ஏராளமான உணர்ச்சிகள் அதைத் தொட்டபடியிருக்கின்றன. அது பதிலிறுக்கிறது.
சூழலினின்று உணர்ச்சி எழுகிறது.
இதை வேறு வகையாகக் கூறலாம்.
செடியில் எப்பொழுதும் சக்தி நிறைந்துள்ளது.
இதற்கு, பதில் கூற முடியும்.

It responds to the application of force.
The force is from its surroundings.
There is another opinion.
They say the experiments are destructive.
These experiments destroy the idea of a vital force in the plant.
It is true of any other living being or organism.
A stimulus is an energised force.
It is a force in dynamic movement.
It has been directed on that object.
A response is from an energised force.
It is a force in a dynamic movement.
It is also of sensitive vibration.
It answers to the shock.
There is a vibrant reception and reply.
There is also a will to grow and be.
It is indicative of sub mental organisation.
It is a vital-physical consciousness-force.
It is hidden in the form of being.
There is a fact.
It is there as a constant dynamic energy.
It is in movement in the universe.
It takes various material forms.
They are more or less subtle or gross.
It is in each physical body or object.
It is in plant or animal or metal.
There is stored dynamic energy.
It is active.
It is the same force.
There is a certain interchange.
It is between these two.



செடியைத் தொட்டால் அது பதிலளிக்கும்.
அதைத் தொடும் சக்திகள் சூழலினின்று எழுகின்றன.
மாற்றுக் கருத்தும் உண்டு.
இந்த சோதனைகள் உணர்வை அழிப்பதாகக் கூறுகின்றனர்.
செடியின் உயிரோட்டத்தை சோதனை அழிக்கிறதுஎன்கின்றனர்.
உயிருள்ள எதற்கும் இச்சட்டம் பொருந்தும்.
தொடுவது தீவிர சக்தி.
தீவிரமாக அசையும் சக்தி அது.
அது செடியை நோக்கிச் செல்கிறது.
தீவிரமான சக்தி பதில் கூறுகிறது.
தீவிரமான சலனத்தின் சக்தியது.
அது உணர்ச்சியுள்ள கதிர்.
அதிர்ச்சிக்கு அது பதிலிறுக்கும்.
ஆழ்ந்த அதிர்வால் பெற்றுப் பதில் கூறும்.
தன்னை வெளிப்படுத்தும் உறுதியுண்டு. வாழும் வளம் உண்டு.
மனத்திற்குக் கீழ்ப்பட்ட அமைப்பை அது சுட்டிக்காட்டுகிறது.
இது உயிர்-உடலின் சித்-சக்தி.
இது ஜீவனில் மறைந்துள்ளது.
இது உண்மை.
தொடர்ந்த தீவிர சக்தியாக இது இருக்கிறது.
அது பிரபஞ்சத்தில் நடமாடுகிறது.
அது பல்வேறு ஜட உருவங்களை ஏற்கிறது.
அவை ஜடமாகவோ, சூட்சுமமாகவோ இருக்கும்.
ஒவ்வோர் உடலிலும், பொருளிலும் அது உண்டு.
அது செடி, விலங்கு, உலோகத்திலுண்டு.
இத்தீவிர சக்தி சேமிப்பாக இங்குள்ளது.
இது சுறுசுறுப்பாக இருக்கிறது.
அதே சக்திதான் அது.
அவை பரிமாறிக்கொள்கின்றன.
அவையிரண்டு.

It gives us a phenomenon.
We associate it with the idea of life.
It is an action.
We recognise this as action of Life-Energy.
It is the Life-Force that energies it.
There is one World-Force.
It expresses as three energises.
They are Mind-Energy, Life-Energy, material-Energy.

*Contd…*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தலைவன், தொண்டன், இருவர் செய்யும் வேலையின் கரு ஒன்றேஎன்பதை அவர்களுடன் உடன் இருப்பவர்கள் அறிவார்கள். ஆனால் தொண்டன் தலைவனானால் அதற்குரிய வலிமையில்லாத காலத்து அவன் தோல்வியடைகிறான்.

***தொண்டனே தலைவன், தலைவனே தொண்டன்.***



இது நமக்கு ஒன்றைக் காட்டுகிறது.
நாம் இதை வாழ்வு என்கிறோம்.
இது ஒரு செயல்.
இதை வாழ்வின் சக்தியின் செயல்என அறிகிறோம்.
வாழ்வின் சக்தி இதைச் செய்கிறது.
ஓர் உலக சக்தியுண்டு.
அது மூவகைகளில் வெளிப்படும்.
மனோசக்தி, பிராணசக்தி, ஜடசக்திஎனப்படும் அவை.

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அகந்தையிலிருந்து சைத்தியப்புருஷனுக்கு மாறுவது, தன்னை நினைக்கும் சுயநலம் பிரபஞ்சத்தை நாடும் பரநலமாவது, ஜீவாத்மாவை நாடுவதற்குப் பதிலாக பிரபஞ்சத்தின் ஆத்மாவை நாடுவது, ஆழ்ந்துபோய் எண்ணமற்ற அறிவை நாடுவது, மனத்தில் அக்னியை எழுப்புவது ஆகியவை ஒன்றுபோன்றவை. ஒரே மாதிரி பலன் தரக்கூடியவை. அத்துடன் யோக முதற்படி.

***முதற்படிகள் பல.***

## இம்மாதச் செய்தி

**உள்ள எல்லாப்**

**பிரச்சினைகளையும்**

**சமர்ப்பணத்தால் தீர்ப்பவரை நாடி**

**பெருஞ்செல்வம் வரும்.**



## அன்பர் கடிதம்

*ஸ்ரீ அன்னை அரவிந்தர் துணை*
*ஓம் நமோ பகவதே*

வணக்கம் பல. சில வருடங்களாக ஸ்ரீ அப்பா அவர்களின் ஆசீர்வாதத்தாலும் மற்றும் அன்னை அன்பர்களின் அன்பினாலும் ஸ்ரீ அன்னை அரவிந்தரை நாங்கள் தெரிந்துகொண்டோம். இத்தனை வருடங்களில் அன்னையின் அருளில் ஏற்பட்ட அனுபவங்கள், கருணை காட்டிய சம்பவங்கள், நெகிழ வைத்த பல நிகழ்ச்சிகள், சொல்லிக்கொண்டே போகலாம். அன்பர்கள் எல்லோரும் அனுபவித்த விஷயங்கள்தாம்.

நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சுமார் பத்து நாட்கள் முன்பு என் தோழி லக்ஷ்மி (எதிர் flatல் குடியிருப்பவள்) என்னைச் சந்திக்க வந்திருந்தாள். அவள் பேசியபொழுது கவலையுடன் என்னிடம் ஒரு விஷயம் சொன்னாள். தன் கணவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையானதால், குடும்பத்தைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை, கஷ்டமாக இருக்கிறதுஎன்று. நான் உடனே ஸ்ரீ அன்னையை வணங்கும்படியும், வணங்க வேண்டிய முறைகளைப் பற்றியும் எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

அவளும் சந்தோஷமாக, ‘‘அன்னையம்மாவைப் பற்றி எனக்கு தெரியும் மாமி. அந்த அம்மாவின் அருளும் எனக்குக் கிடைத்து இருக்கிறது’’ என்று சொன்னாள். ‘‘அப்படியா!’’ என்று நான் ஆச்சர்யமாகக் கேட்டவுடன், சொல்ல ஆரம்பித்தாள். கடந்த மே மாதம் கோடை லீவு சமயம் flatல் இருக்கும் குழந்தைகள், தாங்கள் இருக்கும் flatஇன் மொட்டைமாடியில் function நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டு, விமரிசையாகக் கொண்டாடினார்களாம். அப்பொழுது என் தோழி லக்ஷ்மியின் குழந்தைகள் (இரண்டு பெண்கள்) தங்களுடைய அம்மாவின் புதுப்புடவைகளை (2) எடுத்துப்போய் ஸ்க்ரீனாக உபயோகப்படுத்தினார்களாம். விழா இனிதே முடிந்து, ஆடி, பாடி, கண்டு, களித்து, திருப்தியுடன்

வந்திருக்கிறார்கள்.

ஆரவாரம் முடிந்து ஒரு வாரம் ஓடிவிட்டது. ஜுன் மாதம் வந்துவிட்டது. ஸ்கூல் திறப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் தொடங்கியவுடன், தோழி லக்ஷ்மி தான் புடவைகள் மத்தியில் வைத்து இருந்த 500 ரூபாயை தேடியிருக்கிறாள். பணத்தை காணாமல் போகவே, பயந்துபோய்விட்டாள். தேட, தேட கிடைக்கவேயில்லை. திடீரென்று, புடவைகள் ஸ்க்ரீனாக மாறியது நினைவுக்கு வர, ஓடிப்போய் மாடியில் பார்த்திருக்கிறாள். கீழே விழுந்த 500 ரூபாய் ஒரு வாரம் கழித்து எப்படி இருக்கும்என்று நினைத்து, வருத்தமாகக் கீழே வந்தாள். வந்ததும் வாசலில் ஆட்டோவில் அந்த flatலேயே இருக்கும் சௌ.க்ருபா (இவளும் என் தோழிதான்) குடும்பத்தினருடன் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தாள். அவர்கள் பாண்டிச்சேரிக்கு ஸ்ரீ அன்னை தரிசனத்துக்காகப் போகிறார்கள் என்பது லக்ஷ்மிக்குச் சட்டென்று நினைவுக்கு வர, உள்ளே ஓடிச் சென்று பத்து ரூபாயை கொண்டு வந்து சௌ.க்ருபாவினிடம் கொடுத்து, ஸ்ரீ அன்னையிடம் சேர்க்கும்படிச் சொல்லியிருக்கிறாள். வாசலிலிருந்து திரும்ப வந்ததும் லக்ஷ்மிக்கு துக்கம் தொண்டை அடைக்க, அழுகை வரும் தருணத்தில், அந்த flatலேயே குடியிருக்கும் அன்பர் 'என்ன விஷயம்?' என்று கேட்க, வருத்தத்தோடு எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாள். அந்த அன்பர் உடனே தன் வீட்டிற்குச் சென்று 500 ரூபாயை கொடுத்துவிட்டு, "function நடந்த இரவு, நான் எதேச்சையாக மொட்டைமாடிக்குப் போனபொழுது இந்த ரூபாய் கிடந்தது. விசாரிப்பவரிடம் கொடுக்கலாம் என்றிருந்தேன்" என்று சொன்னாராம். லக்ஷ்மிக்கு அளவிலாத சந்தோஷம். "அன்னையைப் பார்க்கச் சென்றவர்கள் சென்னையைக்கூடத் தாண்டியிருக்கமாட்டார்கள். அன்னையம்மா-வின் அருளை நான் புரிந்துகொண்டேன் மாமி. அம்மாவினிடம் நம்பிக்கை வந்துவிட்டது" என்று கண்ணீர் மல்க கூறினாள்.

இவ்வளவு நம்பிக்கையும், பக்தியும் வைத்தவள் என்னிடம் எவ்வளவு தன்னடக்கத்துடன் கூறினாள். 'அவளுக்கு ஒன்றுமே தெரியாது, எனக்குத்தான் எல்லாம் தெரியும்' என்று எவ்வளவு



கர்வத்தோடு ஸ்ரீ அன்னையைப் பற்றிச் சொன்னேன். என்னை நான் உணர்ந்ததும் நெகிழ்ந்துபோய்விட்டேன். லக்ஷ்மி வீட்டிற்குச் சென்றதும் ஸ்ரீ அன்னையின் படத்தின் முன் நின்று, "பொல்லாத அந்த கர்வத்தை என் மனத்தைவிட்டு நீக்கிவிட்டாய். என்னை மன்னித்துவிடம்மா" என்று நமஸ்கரித்தேன். லக்ஷ்மியின் எளிமையான பக்திக்கு முன் என் வறட்டுப் பெருமை வெட்கித் தலைகுனிந்தது. அன்பர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்என்பது என் விருப்பம்.

*-- லலிதா சேதுராமன், சென்னை*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கல்யாணம்என்பது சமூகம் ஏற்படுத்தியது. ஏகபத்னி விரதம் அதன் சிறப்பான நிலை. அதில் ஆன்மீகமில்லை. அவதாரப் புருஷனுக்கு அடுத்த அவதாரத்தில் அது பயன்படவில்லை.

***கல்யாணத்தின் சிறப்பு சமூகத்துடன் முடிவடைகிறது.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வெளி சக்திகள் புண்படும்படி நம்மைத் தீண்டுகின்றன. இது புற சக்திகளின் செயல் அன்று. அகவுணர்வு தன்னைக் காண புற சக்திகளின் உதவியை நாடுவதால், புற சக்திகள் நம்மை நோக்கி வருகின்றன. அவற்றின் ஸ்பர்சம் நம்மைப் புண்ணாக்குகின்றது.

***அகம் புறத்தால் விழிப்பது மனத்தைப் புண்படுத்தும்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**963) வேலையின் இரு பகுதிகள் இணைந்து செயல்பட ஒவ்வொன்றும் தன்னுள் முறையான அமைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.**

***இருப்பவை சரியாக இருந்தால் இணைந்து செயல்படலாம்.***

- ✡ பெற்றுக்கொள்ளவும் தகுதி தேவை.
- ✡ சேர்ந்தால் மலை, பிரிந்தால் மடு.
- ✡ திறமை பெரிது, பொருத்தம் அதனினும் பெரிது.
- ✡ நெம்பருடன் சைபர் சேர்வது பல மடங்கு உயர்வது. தனித்த சைபர், வெறுஞ்சைபர்.
- ✡ நேரம் வந்தால் நடக்காதது நடக்கும், முடியாதது முடியும்.
- ✡ கொடுக்காததில்லை, பெறாததுண்டு; பெற மறுத்தது ஏராளம்.
- ✡ மனம் விரும்பினால், இல்லாத தகுதியும் உற்பத்தியாகும்.
- ✡ அடக்கம் அருளைப் பேரருளாக்கும்.
- ✡ தகுதியைக் கருதாமல் தருவது அருள்.
- ✡ இல்லாத தகுதியை ஏற்படுத்தித் தருவது பேரருள்.

கிராமம் முன்னேற ஒரு பாக்டரி ஆரம்பிக்க ஒருவர் முன் வந்தால், அது பெரிய சேவை. கிராமத்தில் பாக்டரியை அமைக்க முடியாது. அமைத்தால் நடத்த முடியாது. அங்கு மின்சாரமிருக்காது, ரோடிருக்காது, ரிப்பேர் ஒர்க்ஷாப் இருக்காது. கிராமத்தை முன்னேற்ற ஒருவர் முன்வந்தாலும், முன்னேறத் தேவையான குறைந்தபட்ச தகுதியில்லாமல் முன்னேற்றம் வாராது.

பகவான் ஸ்ரீ அரவிந்தரைச் சமீபகாலமாகத் தமிழ்நாடு அறியும். அவரையும், அன்னையையும் ஏற்றுப் பெறுவதில் குறைந்தபட்சப் பலன் வருமானம்; அதிகப்பட்சப் பலன் யோகம் பலிப்பது. இடைப்பட்ட நிலைகள் பல. சம்பிரதாயங்களை விடுவது ஒரு நிலை. மனமாற்றம் பெரியது, அன்னை கோட்பாடுகளை ஏற்பது அதனினும் பெரியது. அறவே பொய் அழிவது அடுத்த கட்டம். 1910 முதல் பகவான் தமிழ்நாட்டிலிருந்தாலும், புதுவையோ, தமிழ்நாடோ அவரை அறிய முற்படவில்லை. 1958இல் நான் ஆசிரமம் வந்தபொழுது தரிசனங்களுக்கு வெளியூரிலிருந்து வரும் தமிழர் எண்ணிக்கை 43; ஆசிரமவாசிகளில் தமிழர் 21.

- ✡ மற்ற தெய்வங்களை வழிபடுவதுபோல் அன்னையை வழிபட்டால், வாழ்க்கை இரு மடங்கு உயரும்.
- ✡ சம்பிரதாயங்களைக் கைவிட்டால், ஜாதகத்தின் தவறான கர்மங்கள் அழியும்.
- ✡ மனமாற்றம் ஏற்பட்டால், எந்த அளவுக்கு உயர முயன்றாலும் பலிக்கும்.
- ✡ அன்னை கோட்பாடுகளை ஏற்றால், அவர் துறையில் நாட்டில் பிரபலமாகலாம்.
- ✡ பொய் அறவே அழிவது எந்தத் துறையிலும் உலகில் சிறந்து விளங்கலாம்.
- ✡ சரணாகதி பூர்த்தியானால் சத்தியஜீவனாக மாறுவார்.

நாட்டின் ஜனாதிபதியாகும் திறமையுள்ளவர்க்கு வெறும்பெண் மனைவியானால், கல்லூரிப் பேராசிரியராவார். மனைவிக்கு அந்த அளவு கணவன் வாழ்வில் பவர் உண்டு. அதே திறமையுள்ளவன் மளிகைக் கடைத் தகப்பனாருக்குப் பிறந்தால், ஊரில் பெரிய மளிகைக் கடை நடத்துவான். படிப்பு இல்லாமல் உயர முடியாது. படிப்பு அவனை தொழிலதிபராக்கும்.

ஒருவர் வாழ்வில் பெறும் சிறப்பு, பெற்றோர் நிலை, படிப்பு, சுபாவம், குண விசேஷம், படித்த கல்லூரி, மனைவி, உள்ள துறை, நாட்டிலுள்ள காலம், இவற்றால் நிர்ணயிக்கப்படும். எந்த வசதியும் இல்லாமல் அன்னையிடம் வந்தால், பெற்றோர் தாராதது, இல்லாத படிப்பு, மனைவிக்கில்லாத அம்சம், சிறு கல்லூரியை மீறியும்,

அனைத்துமிருப்பதைப்போல் அன்னை ஆதரவு தருகிறார்.

- **இல்லாததை இருப்பதாக்கும் ஆன்மீகச் சூழல்.**
- **இருப்பதை உயர்த்தும் அன்னைச் சூழல்.**
- **இல்லாததை உற்பத்தி செய்து, இருப்பதை உயர்த்தும் ஆன்மீக அடக்கம்.**

❀ ❀ ❀

**964) தனி மனிதனுடைய திறமைகள் சமூகத்தின் திறமைகளுடன் இணைந்திழையும்பொழுது பண்புகள் செயல்பட்டு காரியம் பூர்த்தியாகிறது. தனி மனிதனுடைய பண்புகள் சமூகத்தின் பண்புகளுடன் இணையும்பொழுது ஜீவியம் புரட்சிகரமான மாறுதலையடைகிறது (reverses).**

***பண்பின் செயல்திறன் மனிதனையும் சமூகத்தையும் ஒத்துழைக்க உதவும்.***

- தெம்பு விரும்பத்தக்கது.
- திறமை பெரியது.
- திறமை தரும் தெம்பு பெரியது.
- திறமையைப் போற்றாதவரில்லை.
- திறமை தேவைப்படும் ஊரில் திறமையுள்ளவர் பிரபலமாக இருப்பார்.
- திறமையுடன் தகுதி சேர்ந்தால், பண்பு எழும்.
- பண்புள்ளவர் குறைவு.
- பண்பான ஊர் மிகக்குறைவு.
- பண்புள்ளவர் பண்பான ஊரில் வாழ்வது பாக்கியம்.
- அவர்கள் இணைந்து செயல்பட்டால் நடக்காதது நடக்கும், முடியாதது முடியும்.

  ஊர் வாழ்வு தலைகீழாக மாறும்.



1907இல் அமெரிக்காவில் பெருங்கம்பனிகள், பாங்குகள் திவாலாகும் நிலைக்கு வந்து, நெருக்கடி அதிகமாகி, ஒரு வெள்ளியன்று உச்சக்கட்டம் எட்டியது. சனி, ஞாயிறு மார்க்கட்டுக்கு விடுமுறை. திங்கள் காலை மார்க்கட் திறந்தால், 1 மணி நேரத்தில் திவாலான கம்பனி பெயர் அறிவிக்கப்படும். பெரிய பட்டியல் - கம்பனி, பாங்கு - காத்திருக்கிறது. அப்பொழுது அமெரிக்காவில் ரிஸர்வ் பாங்கில்லை. 1913இல்தான் ரிஸர்வ் பாங்க் அங்கு வந்தது. J.P.மார்கன் பெரிய பணக்காரர். பல கம்பனிகள், பாங்குகட்கு முதலாளி. அவரைப் போல் 10 அல்லது 20 மடங்கு பணக்காரர் பலருண்டு. J.P.மார்கனுக்கு அவர்களைவிட நாணயம் உண்டு. அவர் நாணயத்தை ஊரும், உலகமும், சர்க்காரும் ஏற்றன.

- *நாணயம் பண்பு.*
- *பண்புள்ளவரே பண்பைப் போற்ற முடியும்.*

சர்க்கார் வெள்ளி மாலை J.P.மார்கனை அழைத்து, நெருக்கடியைத் தவிர்க்கும் முயற்சி எடுக்கச் சொல்லி $25 மில்லியன் கொடுத்தார்கள். அவர் திவாலாக இருக்கும் பெரிய கம்பனிகளை அழைத்து இரவோடு இரவாகக் கணக்குப் பார்த்து, எவர் உதவிக்குத் தகுதியுள்ளவர்என நிர்ணயம் செய்து, அவர்கட்கு பாங்குகளை உதவச் சொன்னார்.

- நெருக்கடி தவிர்க்கப்பட்டது.
- நிலைமை தலைகீழே மாறியது.
- பணம் சாதிக்க முடியாததைப் பதவி சாதிக்கும்.
- பதவி சாதிக்க முடியாததைப் பண்பு சாதிக்கும்.
- பண்புள்ளவரை போற்றும் பண்புள்ள ஊருக்கு அத்தகுதியுண்டு.
- 1907இல் இது நடந்தது.
- 1929 அதே நெருக்கடி வந்தபொழுது J.P.மார்கன் உயிருடன் இல்லை. ரிஸர்வ் பாங்க் வந்துவிட்டது. நெருக்கடியைத் தவிர்க்க முடியவில்லை. 10 ஆண்டு நெருக்கடி அட்டகாசம் செய்தது.

❀ ❀ ❀

**965) விஸ்வாசம் உயர்ந்த மனித இலட்சியம். கடந்த கால விஷயங்கட்கு விஸ்வாசமாக இருப்பது, குறிப்பாக அவற்றின் தோற்றத்திற்கு விஸ்வாசமாக இருப்பது எதிர்கால முன்னேற்றத்திற்கு விலங்காகும். முடிவில் அதற்குத் துரோகம் ஆகும்.**

*கடந்த உயர்வும் எதிர்காலத்திற்கு எதிரி.*

- ✡ மனிதனும், இறைவனும் போற்றுவது நன்றி.
- ✡ விஸ்வாசம் விஸ்வரூப தரிசனம்பெறப் போதும்.
- ✡ கடந்தது கருணை வடிவானதுஎன்பது நம் மனநிலை (old is gold).
- ✡ கடந்ததுஎன்பதாலேயே அது கடவுளுக்குச் சமம்.
- ✡ உயரும் மனிதன் உன்னதமானவன்.
- ✡ கடந்ததைப் போற்றுபவன் எதிர்காலத்தில் ஏற்றம் பெறுவான்.
- ✡ உடல் கடந்தது, உயிர் உள்ளது, மனம் எதிர்காலத்திற்குரியது.
- ✡ துரோகம் செய்தவனுக்கும் விஸ்வாசமாக இருப்பது உயர்ந்தது.
- ✡ விஸ்வாசம் விகல்பமறியாதது.
- ✡ விபரமறியாதவனின் விஸ்வாசமும் வீண்போகாது.
- ✡ செய்த எந்தக் காரியமும் வீண்போகாதுஎனில், விஸ்வாசம் வீண்போக முடியுமா?
- ✡ பிறவிப் பயனடைய உடையவருக்கு விஸ்வாசமாக இருப்பது போதும்.
- ✡ கணவனுக்கு விஸ்வாசமானவள் கடவுளுக்குச் சமம். அவள் பேச்சுக்கு இணங்கி சூரியன் உதயமாவதை ஒத்திப்போட்டான்.
- ✡ கணவனுக்குள்ள விஸ்வாசம் திருமூர்த்திகளைக் குழந்தை-யாக்கியது.
- ✡ நல்லது எக்காலத்திலும் நல்லது, கெட்டதாகாது.



- ✡ கெட்டதே நல்லதெனும் ஸ்ரீ அரவிந்தம் நல்ல நன்றியைக் கெட்டதெனக் கூற முடியாது.
- ✡ எதிர்காலத்தின் ஏற்றத்தைவிட கடந்த காலத்திற்குரிய விஸ்வாசம் மேல்.
- ✡ விஸ்வாசத்தால் கெட்டது வாராது, வந்தாலும் முடிவாக நல்லதாகும்.
- ✡ துரோகமும் ஆண்டவனின் படைப்பு. எப்படி அது தவறாக இருக்க முடியும்?
- ✡ ஒரு துளி சத்தியமில்லாமல் துரோகமும் உயிரோடிருக்க முடியாது.
- ✡ உலகம் கணவன் மனைவிக்குச் செய்யும் துரோகத்தை ஏற்று, மனைவி கணவனுக்குச் செய்யும் துரோகத்தைத் தண்டிப்பது சரியா? அதனால் மனைவியின் துரோகம் சரியாகுமா? கணவனின் துரோகம் விஸ்வாசமாகுமா?
- ✡ எது சரி, எது தப்பு?
- ✡ வாழ்வில் முன்னேற்றத்தை நாடுவது சரியா? தப்பா?
- ✡ சமூகத்திற்கு நன்றியிருப்பதில்லை.

  வாழ்வுக்கு நன்றியிருப்பதில்லை.

  பிரபஞ்ச வாழ்வும் நன்றியைப் பாராட்டுவதில்லை.

  அதனால் நன்றிக்கு முக்கியமில்லை எனக் கூறமுடியுமா?
- ✡ குடும்பத்திற்கு எப்படி நன்றி தெரிவிப்பது?

  படித்த ஸ்தாபனங்களுக்குத் தெரிவிக்கும் நன்றியுண்டா?

  ஊருக்கும் உலகத்திற்கும் எவ்வாறு நன்றி செலுத்துவது?

  நன்றிஎன்பது எண்ணமா? உணர்வா? செயலா?

  இவற்றைக் கடந்து ஜீவிய நிலையா? (state of consciousness).
- ✡ நன்றி தவறான பலன் பெற்றதில்லையா?

  எப்பொழுதும் நன்றிக்கு நல்ல பலன் மட்டும் வரும்எனக் கூற முடியுமா?

✡ நமது இன்றைய யதார்த்த நிலை எது?

சில யதார்த்தமான நிகழ்ச்சிகளை பகவான் கூறியதுடன் இணைத்துப் பார்க்கலாம்.

✡ மகளைப் படிக்க வைத்தால் மரியாதை இருக்காதுஎனக் கருதும் தகப்பனார், சம்பாதிக்கும் பெண்ணை, திருமணம் செய்து கொடுத்தால் வருமானம் போய்விடும்என்பதால் திருமணம் செய்து கொடுக்க மறுக்கும் பெற்றோர்.

✡ சிஷ்யன் தனக்குச் சேவை செய்வதால் பிரபலமாவதைக் கண்டு பொறாமைப்படும் குரு.

✡ சிஷ்யனைக் கொலை செய்ய விரும்பும் குரு.

✡ விஸ்வாசமானவன்என்பதால் அவனை அழித்து, கைதட்டிச் சிரிக்க விரும்பும் உடன்பிறந்தவர், உறவினர், நண்பர்கள், ஊரார்.

✡ வீட்டு மனிதரிடம் கணக்குப் பார்ப்பது நயமான செயலில்லை எனில், சொத்து முழுவதும் எடுத்துக்கொண்டு போனபின், மேலும் பலன் எதிர்பார்க்கும் மக்கள்.

✡ மிகவும் தாழ்ந்தவனை, சமமாக நடத்தி, கருகிப்போன வாழ்வுக்கு உயிரளித்து, அரெஸ்ட் வாரண்ட் வந்தபின் அதிலிருந்து காப்பாற்றியவரை முதல் சந்தர்ப்பத்தில் துரோகம் செய்து, அழித்து, பெருமை பாராட்டிய நல்ல மனிதன்.

✡ ‘எப்படியாவது உன்னைத் துரோகம் செய்ய விரும்பினேன். நீயே வலிய வந்து மாட்டிக்கொண்டாய். இனி விடமாட்டேன்’ என்று கொக்கரிக்கும் நீண்டநாள் நண்பர், அரசியல் தலைவர்.

✡ ‘என்னால் எவர் உயர்வதையும் பார்க்க முடியாது’ என்று அறிவிக்கும் சுயநலமி.

கடந்த காலம் கர்மத்திற்குட்பட்டது. அன்னை நம்மைக் கர்மத்தினின்று விடுவித்தபின் கடந்ததை நாடினால், கர்மம் பலிக்கும். துரோகம் செய்யும் பெற்றோருக்கு விஸ்வாசமாக இருந்தால், உடனடியாக வாழ்வு சீரழியும். பிற்காலத்தில் அல்லது அடுத்த



ஜன்மத்தில் விஸ்வாசம் பிரதிபலன் தவறாது பெறும். படித்த ஸ்தாபனத்திற்கு படிப்பைத் தியாகம் செய்து, செய்த சேவை முழுவதும் பயனற்றுப்போனபின், ஸ்தாபகர் மூலம் கிடைத்தற்கரிய பேருதவி கிடைத்தது. துரோகம் செய்த நண்பருக்கும் என்னால் துரோகம் செய்ய முடியாதுஎன்றவர்க்கு நன்றியே உருவான நண்பர்கள் வந்து ஆயுள் முடியும்வரை சேவை செய்தனர்.

✡ வாரண்டிலிருந்து துரோகியைக் காப்பாற்றினால், பிறகு அவருக்கே வாரண்ட் வந்தபிறகு நன்றியே உருவானவர் வாரண்டிலிருந்து காப்பாற்றுகிறார்.

✡ எந்தப் பொருளை அரசியல் தலைவர் ஏமாற்றினாரோ, அதே பொருள் பிரம்மாண்டமான ரூபத்தில் அதன் நன்றியை தெரிவிக்க வந்து, சேவை செய்து மகிழ்ந்தது.

✡ ‘நீ கெட்டுப்போக வேண்டுமல்லவா?’ என ஆசீர்வாதம் செய்த குரு கெட்டுப்போனார். அவர் சொல் எதிராக மாறி, ஏராளமாகப் பலித்தது.

✡ கெட்டது செய்தவருக்கெல்லாம் கெட்டது பெருகி வாழ்வை அழித்தது. கெட்டதால் ஆரம்பத்தில் கெட்டுப்போன அன்பர் வாழ்விலிருந்து கெட்டதே விலகியது.

✡ மனிதர், வயது, பெயர், உறவு, ஊர், பொருள், நேரம், காலம், நோக்கம், எண்ணம், செயல் ஆகியவை சட்டப்படி அவரவர்கட்குரிய பலனைத் தரும். நன்றி சட்டப்படி நடந்துகொள்ளத் தவறாது.

❀ ❀ ❀

*தொடரும்....*

**ஜீவிய மணி**

**மனம் சரணாகதிக்குத் தடை.**

## Sincerity is Security – *Volume-IV, page 193*
## உண்மை பாதுகாக்கும்

✡ நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நேரம் உண்டு. அந்த நேரம் நம்மிடம் உண்மையிருந்தால் பயமில்லை. உண்மையில்லாதவன் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பொய் சொல்கிறான். அதற்குச் சாதுர்யம் வேண்டும். பிறகு, இன்று சொன்ன பொய் மறந்து விட்டால், ஆபத்து. அதனால் பொய் சொல்பவனுக்கு அதிக ஞாபக சக்தி வேண்டும். நாம் சொல்லும் பொய் எப்படியெல்லாம் வெளிவரும்என்று யோசனை செய்யாமல் பொய் சொன்னால் மாட்டிக்கொள்ள வேண்டும். அப்படியெல்லாம் நெடுநாள் உழன்றவர் வரும் முடிவு,

**உண்மைக்கு அழிவில்லைஎன்பது.**

✡ எது உண்மைஎன்பது தெரிந்தால், உண்மைக்கு எப்படி இந்த பவர் வந்ததுஎனத் தெரியும். ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரி உண்மை என்பது நிரூபிக்கக்கூடியதுஎன்று கூறுகிறது. இது நடைமுறையில் உதவாது. ஏனெனில் ஒரு குற்றம் நடந்த இடத்தில் நாம் இருந்தோம்எனில், அதை நிரூபிக்கலாம். அந்த இடத்தில் நாமில்லைஎன எப்படி நிரூபிப்பது? நிரூபிக்க முடியாவிட்டால், அதை உண்மையில்லைஎன முடியுமா?

**ஆன்மீகத்தில் உண்மைஎன்பது ஆன்மா.**
**ஆன்மாஎன்பது அகம். அது புறத்தில் சத்தியமாகிறது.**

உண்மைஎன்பது ஆன்மாவானால், ஆன்மாவுக்கு பாதுகாப்பு உண்டு.

அது நம்மைப் பாதுகாக்கும்.



உண்மை பாதுகாக்கவில்லையெனவும் நாம் அனுபவத்தில் காண்கிறோம்.

எப்படி விளங்கும்? உண்மைஎன்பது நம் மனத்திற்குரியது.

ஆனால் அது வெளிப்பட, நிரூபிக்கப்பட நாம் மனிதர்களையும் சந்தர்ப்பங்களையும் நம்ப வேண்டியிருக்கிறது.

**மனம் உண்மையாக இருந்து பொய்யான பிறரை நம்பினால், உண்மை தோற்கும்.**

✡ உண்மை பாதுகாக்கும்எனில், நாம் உண்மையை மட்டும் நம்ப வேண்டும்.

உண்மையைமட்டும் நம்பினால், அதற்கெப்படி பாதுகாக்கும் பவர் வருகிறது.

உண்மையைமட்டும் நம்பிய அரிச்சந்திரன் பெற்றது பெரிய அவலம்.

காந்திஜீ சத்தியசோதனை எழுதினார். உண்மையைத் தெய்வமாகக் கொண்டாடினார். சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் உண்மை சுதந்திரம் பெற்றது. ஆனால் நாடு துண்டாடப்பட்டது. ஏன்?

**காந்திஜீ பிடிவாதக்காரர். பிடிவாதத்திற்குப் பேர்போனவர்.**
**பிடிவாதம் உண்மையன்று; பொய்.**

**பொய்மூலம் மெய்யை நிலைநிறுத்த முடியாது.**

✡ ஏன் அரிச்சந்திரன் அவலத்தை அனுபவித்தார்?

நாம் அறிவது சமூகம். நடைமுறையில் நம் குடும்பமே நம் சமூகம்.

சமூகம் வாழ்வின் பகுதி. வாழ்வு உலக வாழ்வின் (existence) பகுதி.

நாம் உண்மையாக இருந்து, நம் குடும்பம் பொய்யானால், நம் உண்மை வலுவிழக்கும்.

நாம் உண்மையாக இருந்து, வாழ்வை நம்பினால், வாழ்வு பொய்யானால், நமக்கு வலிமையிருக்காது.

Existence என்பது உலக வாழ்வு. அது எப்பொழுதும் சத்தியம். அது கைவிடாது.

அரிச்சந்திரன் சமூகத்தையும், அதன் சட்டங்களையும் நம்பியதால், அவலம் ஏற்பட்டது.

அந்த நாளில் வாழ்வில் உண்மை குறைவு. பொய் அரசாட்சி செய்தது.

1956க்குப்பின், அதுவும் அன்பர்கட்கு, வாழ்வில் பொய்யில்லை, பொய்க்கு வலிமையில்லை, இடமேயில்லை. நாமே முயன்று பழைய பழக்கங்களை நாடினால், பழைய பழக்கங்கள் பொய்யான வாழ்வில் வளர்ந்தவைஎன்பதால், நம்மைக் கைவிடும். வரலட்சுமிநோன்பு உயர்ந்தது. அதற்கு சத்தியம் உண்டு. ஆனால் பரம்பரையாக அந்த நோன்பு பொய்யான வாழ்வில், பொய்யாகச் செயல்பட்டு வருவதால், இன்று அந்த நோன்பு நம் உண்மையைப் பாதிக்கும். பிழைக்கமாட்டார் என்றவர் அன்னை அருளால் அற்புதமாகப் பிழைத்தார். மருத்துவசட்டப்படி நுரையீரல் கெட்டுப்போனால் சரியாகாது. அவருக்கு அதுவும் சரியாயிற்று. இப்படி ஓராண்டு அருளை அனுபவித்தவர் மனைவி வரலட்சுமிநோன்பு எடுத்தார். நோன்பு முடிந்து வந்து, கணவன் பிணமாக இருப்பதைக் கண்டார்.

- ✯ வரலட்சுமிநோன்பு சக்திவாய்ந்தது.
- ✯ அது பொய்யான சூழலில் பொய்யின் கருவியாகிறது.

மக்களுக்கு உதவ போலீஸ் ஏற்பட்டது. போலீஸில் ஊழல் பரவியுள்ளது. நாம் போலீஸைக் கண்மூடி நம்பினால், போலீஸே நமக்கு உபத்திரவம் செய்யும்.

- ✯ அதனால் போலீஸ் பொய்யாகாது.
- ✯ போலீஸ் பொய்யின் கருவியான நேரம் அதை நம்புபவர் போலீஸால் தண்டிக்கப்படுவர்.



- ✯ போலீஸே திருடனுக்கு ஆதரவான நேரம் உண்டு.
- ✯ போலீஸைக் கண்மூடி நம்புவது ஆபத்து.
- ✯ வரலட்சுமிநோன்பு ஆன்மீகப் போலீஸ்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அதிர்ஷ்டத்தால் திகைப்பது, அருள் மனத்தில் செயல்படுவதாகும். மழை ஜடத்தில் அருள்போல், திகைப்பு மனதில் அருளின் அடையாளமாகும்.

***திகைப்பும் மழைபோல அருளாகும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கொடுப்பது அனைவருக்கும் இயல்பன்று. தன்னை அர்ப்பணம் செய்வது அரிது.

***அதைவிட அரிது தன்னை விரும்பி மலர்ந்து அர்ப்பணிப்பதை, உற்சாகமாக உவந்து ஏற்பது.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## (25) (Occult Secret) சூட்சும இரகஸ்யம் - கீழே போய் மேலே எழுதல்

நாம் மேல்மனத்திலிருக்கிறோம். இதைக் கடந்து உள்மனம் மூலம் அடிமனம் சென்றடைந்தால், அங்கிருந்து சத்தியஜீவியத்திற்கு உயர்ந்து போகலாம்என்ற யோக இரகஸ்யத்தை பகவான் 10 ஆண்டுகள் முயன்று கண்டார்.

✡ நமது பிரார்த்தனைகள் மேல்மனத்திலிருந்து எழுந்து பலன் தருகின்றன. கேட்டது கிடைக்கிறது.

✡ சில சமயம் 2½ கோடி கம்பனிக்கு 16,000 கோடி கம்பனி பார்ட்னராக வருகிறது.

- ❀ ஓர் இரவு முழுவதும் பிரார்த்தனை செய்தால் சீறுநீரகக் கல் கரைந்து மறைகிறது.
- ❀ 20 இலட்ச சம்பனிக்கு ஒரே சமயம் 40 இலட்சக் கமிஷன் சொல்ப நாளைக்குள் வருகிறது.

**பயம் பீதியானால் மேல்மனம் பிளந்து அடிமனம் திறக்கும். ஆசை, பேராசையாகி தீவிரமானாலும் அடிமனம் வழிவிடும். யோக முயற்சியின் முதற்பலன் பயத்தாலும், ஆசையாலும் சில சமயங்களில் கிடைப்பதுண்டு.**

- ❀ சம்பளம் முழுவதாக ஆயிர ரூபாயில்லாத சமயம் 8 இலட்சம் சேமிப்பு எழ முடியுமா? பூரணத் திறமையுள்ளவர்க்கு அதுவும் ஒரு சமயம் நடக்கும். மனம் அமைதியுற்று, புலம்பல் நின்றால் அப்படியும் நடக்கும்.

**இதுபோன்றவை வாழ்வில் யோகப் பலன். இதைப் பலனாக அறியாமல், யோக வாயில் திறப்பதாக அறிந்தால் அன்னை அவர்கட்கு சொந்தமாவார். அவர்கட்கு யோகம் பலிக்கும்.**

❀ விவேகானந்தர், பகவானிடம் மோட்சத்தைவிட்டு, சத்திய ஜீவியத்தை நாடச் சொன்னார். அதனால் கிடைத்தது விஸ்வரூப தரிசனம். அதை நிலையாகப் பெறும் வழியை முதலில் கண்டது பகவான். அதுவே

**மேல் மனத்திலிருந்து கீழே போய் மேலே உயருதல்.**

❀ பகவானும் அன்னையும் பெற்ற யோக சித்திகள் பக்குவமான ஆத்மாக்களுக்கு - வேணுகானம் கேட்பவர் போன்றவர்க்கு - ஒரு க்ஷணம் அனுபவமாக வரும்.

**இது சத்தியஜீவிய லோகப் பேரருளின் அழைப்பு. இது வந்தபின் தவறாமல் ஏற்க வேண்டும்.**

❀ இதைப் பலனாக மட்டும் கருதினால், இது நிச்சயம் மின்னலாக மறையும்.

❀ சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர் இதுபோன்றதை அனுபவித்ததை என்னிடம் கூறியுள்ளனர். இதன் அழைப்பை ஏற்க இதுவரை எவரும் முன்வரவில்லை. குருவாயூரப்பன் குருக்களுக்கு கோலத்தில் மோட்ச லோகத் தேர் வந்தது தெரிந்தது. வீட்டினர் அனைவரையும் உடன் அழைத்தார். எவருக்கும் தேர் தெரியவில்லை. பைத்தியம் என்றனர்.

- ✯ தேர் அவருக்கு மட்டும் தெரிந்தது.
- ✯ அழைப்பை வேலைக்காரிமட்டும் ஏற்றாள்.
- ✯ மற்றவர் வந்த பேர் அதிர்ஷ்டத்தை இழந்தனர்.

## (26) தடையை வாய்ப்பாக மாற்றுவது

✡ சிருஷ்டியில் தடையேயில்லைஎன்பது ஸ்ரீ அரவிந்தம்.

✡ சிருஷ்டியில் உள்ள அனைத்தும் வளரும் வாய்ப்புகள்.

✡ சிருஷ்டியில் இருள் படைக்கப்படவில்லை. நம் கண் பார்வைக்கு ஒளி இருளாகத் தெரிகிறது.

✡ தீமையே படைக்கப்படவில்லை. அகந்தைக்கு நல்லது தீமையாகத் தெரிகிறது.

✡ அனுபவமற்றவனுக்குத் தடை. அனுபவசாலிக்கு இல்லை.

✡ பயந்தவனுக்கு வரும் ஆபத்து, தைரியஸ்தனுக்கு சவால், ஆபத்தில்லை.

*அரசியல் பேச்சாளர் மீது கல் வீசினான்.*
*எட்டிக் கல்லைப் பிடித்து ஏலம் விட்டார்.*
*கல் 100 ரூபாய்க்கு ஏலம் போயிற்று.*

✡ முதல்வர் வாரண்ட் பிறப்பித்தார்.
வாரண்டை ரத்து செய்ய எடுத்த பெருமுயற்சியால் முதல்வருக்கு எதிரியின் திறமை தெரியவந்தது.
வாரண்ட் ரத்தாயிற்று.
முதல்வர் எதிரிக்கு நண்பரானார்.

✡ சம்மன் வந்தால் கட்சிக்காரன் நடுங்குகிறான்.
வக்கீலுக்கு நடுக்கமில்லை, வேலையது.
சொத்தில் 1/3 பங்குள்ளவனை 'உனக்குப் பங்கில்லை, வெளியேறு' என பொய் கேஸ் போட்டான்.
கேஸ் முடிந்தபொழுது முழுச் சொத்தும் அவனுக்குப் போய்விட்டது.
இந்த கேஸே போட்டிருக்காவிட்டால், எனக்கு சொத்து வந்திருக்காதுஎன்றான்.

✡ தடைஎன்பது அறியாமை, சாஸேஸ்த்திரம், அனுபவமில்லாதது, சாதுர்யமில்லாதது, சமயோசிதமறியாதது.

*சிறுவனுக்குத் தடை பெரியவர்க்குத் தடையில்லை.*



*தடை எழுந்தவுடன் நிதானமாக யோசனை செய்தால், அல்லது அனுபவசாலிகளைக் கலந்து ஆலோசித்தால், அது தடையில்லைஎன விளங்கும்.*

✡ அன்னைச் சூழல் சமயோசிதம், சாமர்த்தியம், சாதுர்யம் செய்வதைச் செய்யும். சூழல் தடையை விலக்கும் சூழலை உற்பத்தி செய்யும். பலன் வர நாம் நம் நடைமுறையை அதற்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும். கண்மூடியாக, கர்வமாக, அலட்சியமாக, பொறுப்பற்ற முறையில் திமிராக நடந்தால் சூழல் பலன் தாராது.

**பவ்யமாக, உஷாராகக் கவனித்தால் பலன் வரும்.**

✡ பலன் சிறியது.
திறக்கும் வாயில் பெரியது.
யோக வாயில் திறந்தபின், பலனைப் பெறுவது கவர்னர் ஒருவரை கௌரவிக்க விருந்து நடத்தினால், அங்குள்ள விருந்தை ரசித்துச் சாப்பிடுவதுபோலாகும்.

**பூர்வ ஜென்மப் புண்ணியத்திற்கும் கிடைக்காதது வாயில் திறப்பது. பலனைமட்டும் நாடுதல் அதைத் தவறவிடுவதாகும்.**

*தொடரும்.....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னையழிக்கும்படி, உன்னை நாடுவதை, அழிக்காமல், அதன் வேதனையைக் குறைக்க அன்னையை அழைத்தால், உனக்கு வேதனை வரும்; வளரும்.

***தன்னழிவை நாடி உன்னிடம் வருவதை அழிக்க வேண்டும்.***

## புற ஆராய்ச்சியாலும் அக உணர்வு நெகிழ்வதாலும் சத்தியத்தையடையலாம் (P.7)

புறம், அகம் இரு முகங்கள். ஒன்றால் சாதிப்பதை அடுத்ததால் சாதிக்கலாம். அரசன் கோவில் கட்டினான். அது கல்லாலான கட்டிடம். பூசல் நாயனார் கோயில் கட்டினார். அது நெஞ்சில் எழுப்பிய ஆலயம். இறைவன் அரசனைவிடப் பூசல் நாயனாரைப் போற்றினான். மனக்கோட்டை கட்டுபவரைப் பற்றிய பழமொழி 'ஆண்டி மடம் கட்டியதைப்போல்' என்பது. மனத்தில் உண்மையிருந்தால் மடம் முடியும். இறைவன் எழுந்தருளுவார்.

அரசன் நெடுநாளாகப் பாடுபட்டு ஊரைத் திரட்டி, கோயில் கட்டி முடித்து, கும்பாபிஷேகம் செய்ய நாள் குறிப்பிட்ட அன்று கனவில் பெருமான் தோன்றி, அன்றையதினம் தான் வேறு கும்பாபிஷேகத்திற்குப் போவதால் அரசனுடைய விழாவை ஒத்திப் போடும்படிக் கூறினார். 'இந்த நாட்டில் என்னையறியாமல் எப்படி ஒரு கோவில் எழ முடியும்!' என்று வியந்த அரசனுடைய ஆராய்ச்சிகள் அவனை பூசல் நாயனாரின் முயற்சியிடம் கொண்டு வந்தது. தாம் கட்டும் கோயில் மனத்துள் உள்ளதுஎனவும், அவர் கையாண்ட முறைகளையும், எவ்வளவு நாள் முயற்சியது என்பதையும் பூசல் அரசனுக்குக் கூறினார்.

**புறம் சாதிப்பதை அகமும் சாதிக்கும்.**
**புறத்தின் முயற்சி ஆராய்ச்சி, முயற்சி.**
**அகம் மேற்கொள்வது தவம்.**
**அகத்தின் பிணக்கை அன்பின் புணர்ச்சியாக்குவது தவம்.**
**அகம் நெகிழ்ந்து சத்தியமாக மலர்வது அகவுணர்வு.**



ரிச்மாண்ட் கோட்டை Castle Richmondஎன்பது அயர்லாந்தில் அமைந்த கதை. ஆங்கில ஆசிரியர் ஆன்தொனி டிராலப் எழுதியது. ஓவன்என்பவர் £800 வருமானமுள்ள நிலச்சுவான்தார். பேர் அழகன். 30 வயது. பெற்றோரில்லை. வீட்டில் வேறு எவருமில்லை. சத்தியசீலர் gentleman. நல்லவர்எனப் பெயர் வாங்கியவர். குடும்பமில்லாததால் திருமணமாகாத இளைஞருடன் தவறற்ற கேளிக்கைகளை அதிகமாக அனுபவிப்பவர். அவர் உறவினர் (cousin) ஹெர்பர்ட். இளைஞர், 23 வயது. £14,000 வருமானம் உள்ளவர். தாய், தகப்பனார், சகோதரிகளுடன் வாழ்பவர். அருகில் வசிக்கிறார். வருமானமில்லாத (earl) பிரபு பேட்ரிக், 15 வயது சிறுவன், ஆக்ஸ்போர்டில் படிப்பவன். அவன் சகோதரி கிளாரா 16 வயது பெண். அவர்கள் தாயார் மேரி, 38 வயது. மேரி இளம் வயதில் (title) பட்டத்திற்கு ஆசைப்பட்டு வயதான பிரபுவைத் (earl) திருமணம் செய்து, Lady Desmond என்ற பட்டம் பெற்றார். பெண் Lady Clara, மகன் Lord Patric. ஓவன், கிளாரா 7, 8 வயதிருக்கும்பொழுது அவளை மணக்க விரும்பி, மனத்தால் அவளை வரித்துவிடுகிறான். 16ஆம் வயதில் அவளிடம் தன் விருப்பத்தைக் கூறி, சம்மதம் பெறுகிறான். தாயாருக்கு ஓவனுடைய வருமானம் சிறியதுஎன்பதால் அபிப்பிராயம் இல்லை. மகளை மறுக்கும்படிக் கூறுகிறாள். மகள் மறுத்துவிடுகிறாள். மேரி - தாயார் - கிழவரை மணந்து, விரதமான வாழ்வை நடத்தி, விதவையாகி, சொல்ப வருமானத்தில், பெரிய கோட்டையில், Lady Desmond பட்டத்துடன் வாழ்கிறாள். அவள் மனம் அன்பை அறியாது. அவள் வாழ்வில் காதல் மலர்ந்ததில்லை. விதவை மறுமணம் செய்வது அவர் வழக்கம். ஓவன் அழகன். சீரிய குணமுடையவன். பழக்கம் போதாது. மேரிக்கு அவனை மணக்க ஆசை. மேரியைவிட ஓவனுக்கு 10 வயது குறைவு. அவர்கள் நாட்டில் 60 வயது பெண் 30 வயது வாலிபனை மணப்பதுண்டு. மேரிக்கு ஓவன்மீது விருப்பம். ஓவனுக்கு கிளாரா மீது விருப்பம். கிளாரா தாயார் சொற்படி ஓவனை மறுத்துவிட்டாள். ஹெர்பர்ட் அவளை சம்மதம் கேட்டுப் பெற்றுவிட்டான். அது தாயாருக்குச் சம்மதம். சில மாதம் கழித்து ஹெர்பர்ட் தாயார் செய்த திருமணம் செல்லாதுஎன சிக்கல் எழுந்து,

ஹெர்பர்ட் தகப்பனார் மனம் உடைந்து இறந்துபோகிறார். சட்டப்படி சொத்து ஓவனுக்குப் போகிறது. ஓவன் சட்டத்தைப் புறக்கணித்து, நியாயப்படி நடக்கும் பெருந்தன்மையுடையவர். அவர் சொத்தை ஏற்க மறுத்துவிட்டார். சட்டப்படி எனக்கு வாராத சொத்து எனக்குத் தேவையில்லையென ஹெர்பர்ட் சொத்தை ஏற்க மறுத்துவிடுகிறார். சொத்து ஓவனுக்குப் போவதால் மேரி தம் மகளிடம் ஓவனை மணக்கச் சொல்கிறார். கிளாரா மறுத்துவிடுகிறாள். பணத்திற்காக மனம் மாற அவள் இசையவில்லை. நிலைமை மாறி, திருமணத்தில் எழுப்பிய சிக்கல் பொய்யெனவும், மீண்டும் சொத்து ஹெர்பர்ட்டுக்கு வருகிறது. கிளாரா, ஹெர்பர்ட் திருமணம் நிலையாகிறது. திருமணம் நிலையாகுமுன் பேட்ரிக் ஆக்ஸ்போர்டிலிருந்து வந்து ஓவனை தம் தமக்கையை மணக்கும்படிக் கேட்கிறான். ஓவன் கிளாராவை மணக்க மனம் நிறைய விருப்பப்பட்டாலும், அந்த சொத்தைத் தன்னால் ஏற்க முடியாதுஎன உறுதியாகக் கூறுகிறான். பேட்ரிக் கிளாராவையும், சொத்தையும் மறந்து, ஓவனின் பெருந்தன்மையைப் பாராட்டி, அவனைக் கட்டித் தழுவி கண்ணீர்விடுகிறான். நிலைமை மாறி, கிளாரா, ஹெர்பர்ட் திருமணம் நடைபெற முடிவாகிறது.

மேரிக்கு மகள் திருமணம் மனநிறைவு தந்தது. முதல் முறை ஓவன் மகளை மணப்பதைத் தடை செய்தாள். இரண்டாம் முறை ஓவனை கிளாரா மணக்க நினைத்து, எண்ணம் பலிக்கவில்லை. அவள் மனம் ஓவனால் நிறைந்துள்ளது. மனம் உடைந்த ஓவன் நாட்டை விட்டுப் போவதாகக் கூறி, அவளிடம் ஏற்கனவே விடை பெற்றுப் போனான். அவனைக் காண விரும்புகிறாள். எப்படி ஒரு பெண் ஓர் ஆண்மகனை நாடி 15 மைல் போய் சந்திக்க முடியும்? அது நடைபெறாது. மனம் அவனை நினைக்கிறது; அவன் உறவை நினைக்கிறது. உறவில் உணர்வு சேகரமாகிறது. நெஞ்சம் நிறைகிறது. ஓவன் உள்ளே வந்து எதிரில் நிற்கிறான். நாட்டை விட்டுப் போகுமுன் விடைபெற வந்ததாகக் கூறுகிறான்.

**நிறைந்த நெஞ்சம் நினைவைச் செயல்படுத்தியது.**



நெஞ்சம் தவறியதில்லை. அதற்குச் சொல் தேவையில்லை, கடிதம் எழுதவேண்டாம். காத தூரமானாலும் கருத்து காற்றுவாக்கில் செல்லும்; பதிலெழும். புறம் செய்வதை அகம் அழகாக முடிக்கும். பெண் என்பதால் போக முடியாத சூழ்நிலை. சொல்லி அனுப்புவதும் முறையில்லை. சொல், சொல்லியனுப்பாமல் போய், பதிலுக்கு ஓவனை அழைத்து வந்தது. அவன் மனம் கிளாராவால் 10 வருஷமாக நிறைந்துள்ளது. மேரி மனம் ஓவனால் நிறைந்துள்ளது. மனம் திறந்து மேரி பேசுகிறாள். ஓவனுக்கு அது காதில் விழவில்லை. விடைபெற்றுச் செல்கிறான்.

- ✡ உள்ளத்தின் போராட்டமானாலும், உலகப் போரானாலும், புறம் சாதிப்பதை அகம் அதிகமாகச் சாதிக்கும்.
- ✡ 1940இல் இங்கிலாந்திடம் எந்த படையும், திறனும், பணமும் இல்லை. *சர்ச்சிலும், அவர் மனம் நிரம்பி வழியும் தைரியமும் இருந்தது. அவர் அகம் இங்கிலாந்தின் அகமாகி, உலகை வென்றது.*
- ✡ 1947இல் கல்கத்தா கலவரத்தின்பொழுது மகாத்மாவின் உண்ணாவிரதம் குண்டர்கள் மனத்தை மாற்றி, சமாதானத்தை நிறுவியது.
- ✡ புறம் தவறலாம், அகம் தவறாது.

  தவறறியாதது அகவுணர்வு.

  புறமும், அகமும் பகுதிகள்.

  பூரணமுடையது ஆத்மா.

❀ ❀ ❀

## அறிவிப்பு

டிசம்பர் இதழுடன் சந்தா முடிவடையும் அன்பர்கள் தாமதமின்றி சந்தாவினை புதுப்பிக்க வேண்டுகிறோம்.

# மனிதனும் மிருகமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

சியாமளா ராவ்

அந்த ஆச்சரியக்குறியை நம் மனதிலிருந்து விடுவிக்க வேண்டும். நம் வேண்டுதலை, ஒருமுகமாக, எந்த சஞ்சலமுமின்றி, அன்னை என்ற தெய்வத்திடம் கூறிவிட்டு, வேண்டி, அதன்பின் அதைப் பற்றிய மன உளைச்சலை நம்மிடமிருந்து விலக்கியேவிட வேண்டும். அன்னையிடம் நாம் குழந்தையாகத்தான் மாற வேண்டும். ஆனால், பிடிவாதக் குழந்தையாக அன்று. அன்னையை நம்பும், சரணாகதியாக சரணடையும் பெரிய குழந்தையாக, மனதளவில் உருகும் குழந்தையாக, தாய் மடியை அடைக்கலமாகக் கொண்டு, மடியில் முகம் புதைத்து, கண்கள் மல்க, நம் ஆதங்கத்தை வெளியிடும் குழந்தையாகத்தான் நாமிருக்க வேண்டும். நம் மனதின் உணர்வுபூர்வமான இந்த சரணாகதிதான் நாம் அன்னையிடம் நெருங்கச் செய்யும் வழியாகும். இந்த வழியை நாம் கைவிடாமல், உணர்ந்து செயல்பட்டோமானால், நம் வாழ்க்கையில் ஒரு சுமுகம், ஓர் ஆனந்தம், ஒரு மகிழ்ச்சி, ஓர் ஏற்றம், ஒரு நிம்மதி, அத்தனையுமே நமக்கு புதையல்போல் கிடைக்கும் என்பதை, நம்மால் உணர்வுபூர்வமாக உணர முடியும்என்பது உறுதி.

இதெல்லாம் படித்தவர்களுக்கு, ஓர் ஆதாரம் கிடைத்தால், அதை அப்படியே அலசி, ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் என்றால், பாமரர்களுக்கு, யார், எது சொன்னாலும் உடனடியாக ஏற்று, அதன்படிச் செய்வார்கள், அவர்களின் சக்திக்கேற்ப. அது போலத்தான் அன்னம்மாளின், அவள் மருமகளின் அன்னையிடம் இருந்த நம்பிக்கையும், பிரார்த்தனையும் மகனை எழுந்து உட்கார வைத்தது. அவன் மனதைத் திருந்தவும் வைத்தது. அவர்களின் குடும்பம் இனியதாக, குறையில்லாததாக, சந்தோஷத்துடன் ஆரம்பித்தது. இனி அந்த சந்தோஷமான ஆரம்பத்திற்கு முடிவேது! இனி அவர்கள் குடும்பம் அன்பும், பாசமும், நேர்மையும், நேசமுமாக துளிர்த்து, வளர்ந்து, கிளைவிட்டு, பரந்து வளரும் மரமாக அல்லவா மாறப்போகிறது!

அன்னை என்கிற மூன்றெழுத்து மந்திரம், அவர்களின் சிறிய வீட்டில் இனி பிரகாசமான விளக்காக அல்லவா, 'நந்தா' விளக்காக வெளிச்சம் என்னும் ப்ரும்மாண்டத்தைத் தரப்போகிறது.

கேட்கும்போதே நம் மனம் பரவசப்படுகிறதுதானே. நம் மனமும், நாமும் அதுபோல், அந்த தாரக மந்திரத்தை ஜபிக்க வேண்டும் என்கிற எண்ணமும், ஆசையும் முட்டி மோதிக்கொண்டு, நம் இதயத்துக்குள் குதியாட்டம் போடுகிறதுதானே. அதை அப்படியே, எப்போதும்போல் அந்த குதூகலமான மகிழ்ச்சியோடு அன்னையை நம் மனதார ஏற்றுக்கொள்வோம்.

❀❀❀

தியானமையத்திற்கு, கட்டிடத்திற்கும், கிரானைட்டிற்கும் செலவழித்த அந்த மனிதரின் பெயர் பார்க்கவன்.

அன்று தியானமையத்தின் ஆண்டு விழாவை விமரிசையாக, அதே சமயம் அமரிக்கையாகக் கொண்டாடினார்கள். பக்தர்களின் கூட்டம், அதிகமாகயிருந்தாலும், அவரவர் அன்னையிடம் பிரார்த்தனை செய்துவிட்டு, அமைதியாக கையில் (ஸ்வீட்) பிரசாதத்துடன் சென்றனர்.

பார்க்கவன் காலையில் வந்தவர், இரவு பத்து மணிவரை இருந்து, அவரும் சாதகர்களுடன் சேர்ந்து, கூடமாட அவ்வளவு வேலையையும் செய்தார். களைப்புஎன்பதே அவரிடமில்லை. ஓர் உற்சாகம், துள்ளலாக அவரிடம் இருந்தது. அடிக்கடி அவர் பார்வை அன்னை, ஸ்ரீ அரவிந்தரை கனிவுடன் நோக்கும்போதெல்லாம் கண்கள் கசிந்தது புரிந்தது.

சத்தியனும், மாமாவும், பார்க்கவனை, அவர் மனதிலிருக்கும் விஷயத்தைப்பற்றி இதுவரை அவர்கள் கேட்கவில்லை. கேட்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை. எல்லாமே அன்னையிடம் ஒப்படைத்துவிட்டு, அவர் நிச்சலனமாகயிருக்கும்போது, நாம் ஏன் அதைக் கேட்டு சலனத்தை ஏற்படுத்த வேண்டும்? சொல்ல வேண்டியது அன்னையிடம். அதை அன்னை அல்லவா எதைச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்வார்என்கிற நம்பிக்கையோடு

இருக்கிறார்கள். அதை நாம் இடையில் தடையிட்டுப் பேசுவது கூடாதல்லவா? மௌனமாகவேயிருந்தனர்.

நாட்கள் வாரத்தைக் கடந்து மாதங்களாயின. அப்போதுதான் பார்க்கவன் கை நிறைய மட்டுமல்ல, ஒரு பெரிய மூட்டைபோல், ஆளை வைத்து தூக்கிக்கொண்டு வந்து அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் முன்பு வைத்து, கண்கள் நிரம்ப, சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். அவர் முதுகு குலுங்குவதிலிருந்து, அன்னையிடம் அவர் மனம் கசிந்து கண்ணீர் பெருக்குவது புரிந்தது. மாமாவும், சத்தியனும், அவருக்காக அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வேண்டினரே தவிர, அவரைத் தொந்திரவு செய்யாமல் அமர்ந்தனர்.

சில நிமிடங்களில் தெளிந்து எழுந்தவர், தான் கொண்டு வந்ததை ஆபீஸ் ரூமில் வைத்தார்.

''அன்னை எனக்கு நல்ல வழி காட்டிவிட்டார். அதனால்தான்... அதனால்தான்...'' மேலே வார்த்தைகள் வாராமல் கண்ணீர் வழிய, இரு கரம் கூப்பி, அந்த மூட்டையைக் காண்பித்தார்.

''பார்க்கவன்... சந்தோஷம். ஆனால் ஒன்று... இதை நீங்கள் வாசலிலிருக்கும் நாற்காலியில் உட்கார்ந்து, உங்கள் கைப்படவே கொடுத்துவிடுங்கள். இந்த தியானமையத்திற்குள் வேண்டாமே. இங்கு இருக்கும் சாதகர்கள் பூப்பிரசாதம் கொடுக்கிறார்கள் இல்லையா, அதுவும் வருபவர்கள் திரும்பப் போகும்போது கொடுக்கிறார்களே... அப்போதே... உங்கள் கையாலேயே கொடுத்து விடுங்கள்'' என்று நாசூக்காகத் தெரிவித்ததில், அவரும் புரிந்து கொண்டு, அதன்படியே செய்தார்.

தியானமையத்தின் சாதகர்களுக்கும் கொடுத்து, பின் ஆபீஸ் அறையில் சத்தியனுடனும், மாமாவுடனும் நெகிழ்ந்து பேசினார்.

''அன்னையோட அருளால என்னோட மகன் மீண்டு வந்து விட்டான். எங்கேயிருந்துன்னு உங்ககிட்ட சொன்னா, அதிர்ந்து போயிடுவீங்க. வழி, வகை தெரியாம, அலைபாயற மனசோடத்தான் வந்தேன். ஆனா... நான் பண்ணின ஒரே தவறு, சம்பாதிக்கிற பணத்தை இன்னும், இன்னும்னு அவலாதியோட பிஸினஸ் பண்ணியவன், என் வாரிசான ஒரே மகனை, கவனிக்கத் தவறியதிலே... கீழ்த்தரமான போதை மருந்து சாப்பிடறதிலேயும்,



குடிக்கிறதிலேயும் மூழ்கியேபோனான். அதுலேருந்து மீண்டு வர அவன் என்கிட்ட வந்து, என்னைக் கட்டிப்பிடிச்சுண்டு, ''அப்பா... என்னை இந்தப் படுகுழியிலேருந்து வெளியே கொண்டு வாங்கப்பா... அப்பா... ப்ளீஸ்பா... என்னால முடியலே... அப்பா... வீட்டை விட்டு வெளியே போக பயமாயிருக்குப்பா... நான் வெளியே போனா அவா என்னைப் பிடிச்சுப்பாளே... விடமாட்டா... பணம் கொண்டு வரச் சொல்லி... என்னை அடிப்பா... மருந்தைக் குடுத்து... குடுத்து, என்னை அடிக்கிறாப்பா... இதோ பாரு... இங்கே பாரேன்... முதுகுல பாரு... காலுல பாரு... பார்த்தியா... முடியலே... எனக்கு வெளியே போக பயமாயிருக்கு... அப்பா... என் உடம்பு பூராவும் நடுங்கறது. முடியலே... ஆனா... இனிமே அதை எடுத்துக்கக்கூடாதுன்னுதான் நினைக்கறேன்... ஆனா... ஒடம்பெல்லாம் நடுங்கி, உதற ஆரம்பிச்சுடறதே... அப்பா... என்னைக் காப்பாத்துப்பா... காப்பாத்துப்பா... அப்பா... அப்பா... அ...ப்...பா...''

தட்டுத் தடுமாறி அவன் பேசிய பேச்சுக்களும், நடுங்கும் உடலும், எதையோ பற்றிக்கொள்ளத் துடிக்கும் துடிப்பும்... தாங்க முடியலே... என் மனைவி மயக்கம் போட்டு விழுந்தேவிட்டா. ஆனா... நான்... தவிக்கிற, பரிதாபமான பார்வையில நடுக்கத்தோட கெஞ்சும் என் மகனை கட்டியணைத்தவன், மனைவியையும் தடவிக்கொடுத்து... நான் வாய்விட்டு கதறிய கதறல் இந்த அன்னைக்கு எப்டி எட்டித்துன்னு எனக்குத் தெரியவுமில்லே... புரியவுமில்லே...

ஆமாம்... நான் கதறிக் கதறி ரெண்டு பேரையும் என்னோடச் சேர்த்துண்டு, நான் ஒரு ஆண், குடும்பத்தோட தலைவன், நான்தான் அவர்களை ஆதரவோடு நடத்தணும்கறதெல்லாம் மறந்து, ''அம்மா! அம்மா! அம்மா!...''ன்னு வேறெதையும் சொல்லத் தெரியாம கதறிக் கதறித் தளர்ந்து, மயக்கமாயிட்டேன். அந்த மயக்கத்துலேயே என் கண்ணுக்குத் தெரிந்தது ஒரு உருவம். அதுவரை நான் பார்த்தே அறியாத உருவம். ஆனா, எங்கேயோ, எப்போதோ பார்த்த மாதிரியும், அந்த கண்களின் கருணை, அன்பு, தீர்க்கம், எல்லாமே என்னோட சரீரத்துக்குள்ளே புகுந்து என்னமோ செஞ்சது. ஆனா, அது மட்டுமல்ல, என் வாயிலிருந்து ''அம்மா! அம்மா!'' என்கிற வார்த்தையைத் தவிர வேறெதுவும் வராதது ஏன் என்பது அப்போ

புரியலே... தெரியவுமில்லே. ஆனா... அந்த மயக்கத்துலயும் என் கண்களுக்குத் தெரிந்தது... இன்னும் ஞாபகமிருக்கு. வயதான மூதாட்டி... கருணை நிரம்பிய கண்களால் என்னைப் பார்த்து புன்னகைத்தது... என்னால் மறக்கவே முடியாது. அந்தக் கனிவும், பாசம் நிரம்பிய பார்வையும், அந்த க்ஷணமே அவர் கால்களில் வீழ்ந்து கதற வேண்டும், அந்தப் பாதங்களைப் பற்றிக்கொண்டு சரணாகதியாக வேண்டும்... ''விடமாட்டேன்... அந்த பாதங்களை விடமாட்டேன். நீ யாரென்று தெரியாது. எங்கிருக்கிறாய், தெரியாது. ஆனால் என் மனதில் நீ பதிந்துவிட்டாய். நீதான் என் தெய்வம். நீதான் என்னைப் பற்றிக்கொண்டு, என் குடும்பத்தை நல்வழியில், நல்ல இதமான, கசடுகளற்ற பாதையில் எங்கள் கரம் பிடித்து, அழைத்துச் செல்ல வேண்டும். அம்மா! நீ எங்கிருக்கிறாய்? எங்கே இருக்கிறாய்? நீ இருக்கும் இடத்தை எனக்குத் தெரியப்படுத்து. அம்மா... உன் பாதமே சரணம்'' என நான் வீழ்ந்து வேண்டுகிறேன். எல்லாமே என் மனதினுள்தான் இந்தச் சரணத்தைச் செய்கிறேன். ''நீ எங்கு இருக்கிறாய்... சொல்லம்மா... காட்டம்மா... அம்மா... அம்மா... அம்மா... நீ எங்கிருந்தாலும் அலைந்து திரிந்தாவது கண்டுபிடிப்பேன். அதற்கான வழியை மட்டும் சொல்லம்மா... அம்மா... அம்மா... வழிகாட்டு... வழிகாட்டு... அம்மா...''

நானும் மயங்கித்தான்போனேன். ஆனால், என் வாயில் மட்டும் ''அம்மா, அம்மா'' என்கிற வார்த்தைகள் தவிர வேறெதுவுமில்லை. சிறிது நேரத்திலேயே எனக்கு மயக்கம் தெளிந்தது. ஆனால் தாயும், பிள்ளையும் அப்படியே கிடந்தனர். சரி, சமையற்காரம்மாவைக் கூப்பிட்டு ஏதாவது கஞ்சியோ, பாலோ... எதையாவது தரச் சொல்லி, நானும் குடித்து, அவர்களுக்கும் தரலாம் என்று போனால்...''

மேலே வார்த்தைகள் வராமல் தேம்பினார் பார்க்கவன்.

''பரவாயில்லே... போறும். கஷ்டப்பட வேண்டாம். அன்னை அருளாலே எல்லாம் சுமுகமாத்தான் ஆயிடுத்தே. போறும் பார்க்கவன்...'' சத்தியன் கூற, அவர்... மறுத்தார்.

''இல்லே... நான் சொல்லியே ஆகணும். சமையற்காரம்மாவைப் பார்க்கப் போனால், ஒரு சின்ன படத்தின் முன் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தாங்க. இத்தனை நாளும் நான் சமையலறைப்



பக்கம் போனதேயில்லை. அந்த அவசியமுமில்லே. எனக்கு சட்டுனு, அவங்க மேலே ஒரு கோவம்தான் வந்தது. வீட்டுல இத்தனை அமளி நடக்கறப்ப இதென்ன இத்துனுண்டு படத்தை வச்சுண்டு உக்காந்திருக்காங்கன்னுதான் தோணித்து.

ஒரு வினாடி நேரத்துல நான் அவங்க அருகில போய், திட்ட போனபோது, என்னையறியாமலேயே என் கண்கள் அந்தச் சின்ன படத்தின் மேலே போச்சு. அவ்வளவே... சரீரமே சூடாகி வியர்த்துக் கொட்டி, நடுங்கித்து. என் உணர்வில்லாமல், தானாகவே என் கைகளிரண்டும் கூப்பின. அப்படியே ''அம்மா... அம்மா''ன்னு சரணாகதியா அவங்க காலுல வீழ்ந்தேன், கதறினேன். அது சந்தோஷமா, சங்கடமான்னு எனக்குத் தெரியலே, புரியவுமில்லே.

சமையற்காரம்மா விதிர்விதிர்த்துத் தன் தியானத்துலேருந்து எழுந்துட்டாங்க. நான் விழுந்து கதறினதைப் பார்த்தும், அவங்க மௌனமாய், தானும் வேண்டிகிட்டாங்க. ஒருவழியாய் என் மனதும், சரீரமும் அடங்கி, எழுந்தேன். அந்த சமையற்காரம்மாவையும் இரு கரம் கூப்பி வணங்கினேன். அந்தப் படத்துலே இருக்கிறது யாருன்னு கேட்டேன். அன்னைன்னு சொன்னாங்க. ஸ்ரீ அரவிந்தர் பத்தியும், அன்னையைப் பத்தியும் சொன்னாங்க. என் மகனுக்காக அவங்க தினமும் அன்னைகிட்ட வேண்டிக்கிட்டதையும் சொன்னாங்க. அப்படியே அவங்க கால்கள்ளயும் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதேன்.

''இல்லே... அன்னையிருக்கிறப்ப, இனி அழக்கூடாது. அவங்க எல்லாத்தையும் சரி செய்வாங்க. அதோட ஆரம்பம்தான் இன்னிக்கு உங்களுக்கு ஏற்பட்டது. இனிமே உங்க மகனுடைய எதிர்காலத்தை அன்னையிடமே ஒப்படைச்சுடுங்க. மாம்பலத்துல தியானமையம் இருக்கு. உங்க குடும்பத்தோட போய்ட்டு வாங்க. உங்களால முடிஞ்ச காணிக்கையைப் போடுங்க''ன்னு சொன்னாங்க. ஆனா, என்னைத் தவிர அவங்க ரெண்டு பேரும் வர்ற மனநிலையிலயில்லே. அதுக்காக, அவங்களைக் கண்டிப்பும் செய்யலே, தொந்திரவும் தரலே. நான் மட்டும் வந்துண்டிருந்தேன். என் கனவுல வந்தவங்க அன்னைதான். அதுவும் என் வீட்டிலேயே இருந்திருக்கிறதைத் தெரிஞ்சுக்காத மூடனாயிருந்துருக்கேனேன்னு மனசு கிடந்து தவிச்சுது. அங்கே

தியானமையத்துக்குத் தினமும் போய்ட்டு வந்தேன். அப்பத்தான் ஒரு நாள் இந்தப் பக்கமா வந்தபோது, இங்கிருக்கிற தியான மையத்தைப் பார்த்தேன். அங்கே, என்னோட அன்னைக்குன்னு ஏதாவது செய்யணும்னு தோணித்து. அதான்... இப்ப என் மகன் நல்லாயிட்டான். வீடும் சந்தோஷத்தோடயிருக்கு. அன்னை, ஸ்ரீ அரவிந்தரோட படங்களை வச்சு தினமும் எல்லாருமா தியானம் செய்யறோம். எங்கத் தோட்டத்துலயிருக்கிற பூக்களை அன்னைக்காகன்னே பறிக்கிறோம். அதுவும், என் மகனே பறித்து, தட்டில் அடுக்கி, தியானம் செய்யிறான். அந்த சந்தோஷம்தான் இன்னிக்கு... இன்னிக்கு'' மேலே பேச்சு வராமல் அழுகை தடுத்தது. ''அவனை இங்கே அழைச்சுண்டு வரணும்னுதான் ஆசை. அன்னையின் உத்திரவுக்காகக் காத்திருக்கேன். அதுவும் கண்டிப்பா நடக்கும்கறது தெரியும். அன்னையின் இச்சைப்படி நிச்சயமா நடக்கும். அந்த நம்பிக்கை எங்க எல்லாருக்குமே பூரணமா இருக்கு. ஆமாம், இருக்கு...''

கண்கள் தளும்ப, இரு கரம் கூப்பி நின்றார் பார்க்கவன்.

❀❀❀

ஜனவரி முதல் தேதி. தியானமையம் புத்தம் புதியது போல் தோற்றமளித்தது. வந்தவர்களும் புதிய ஆடை அணிந்து, எந்தவிதமான பேச்சுமின்றி, அன்னையை ஸ்மரணம் செய்தபடி, வரிசையில் நின்று, எந்த தள்ளல், போட்டியின்றி, அமைதியாக, வரிசையாக நகர்ந்து, அன்னையின் தரிசனத்தை ஆத்மார்த்தமாக ஏற்றுக்கொண்டு, மனதில் ஒரு நிம்மதி எனும் ஊற்றை சுமந்தபடி வெளியே வந்தனர். பூ பிரசாதமும், சாக்லெட்டும் வாங்கியபடி அமைதியாக வெளியேறினர்.

❀❀❀

பிப்ரவரி 21ந் தேதி. அன்னையின் பிறந்த நாள். தியானமையம் கோலாகலமாய் தோற்றமளித்தாலும், அமைதியின் உச்சம் வெகு நன்றாகவேயிருந்தது.

விடியற்காலை ஐந்து மணியிலிருந்தே வருகிறவர்களின் வருகை ஆரம்பித்தது. சரியாக ஆறு மணிக்கு தியானம் ஆரம்பிக்கும்போது, அந்த அமைதியின் கனம், கனக்காமல், ஒரு



பவித்திரமான சந்தோஷத்தையும், அமைதிமிக்க சூழ்நிலையையும், நிரம்பிய மனதின் மகிழ்ச்சியையும், சுகந்தமான ஊதுபத்திகளின் நறுமணத்தையும் அங்கிருந்த அனைவர் மனதிலும் நிரம்பச்செய்தது.

இத்தனையிலும் மிக மிக ஆச்சர்யம், தியான நேரமான அந்த அரை மணி நேரத்தில், அந்த வீதியில் எந்த வாகனங்களின் சத்தமோ, இரைச்சலோ இல்லவேயில்லை.

'ஆத்மசோதனை'யில் 'வழிபாடு' என்ற கட்டுரையில் 10 வழிகளினைப் படித்தாலே பரவசமான பக்தி வரும். எப்படி என்பது மிகத் தெளிவாக உள்ளது. அன்று, அந்த நிலையில்தான் தியானமையத்தின் சூழ்நிலை அமைந்திருந்தது. இல்லையெனில் காகத்தின் கரைசல்கூட இல்லையே, அது எப்படி? சூழல் என்பது பக்திக்கு ஏற்ப அமைதி இருக்கும் என்பதின் அடையாளம் அது.

அமர்ந்திருந்தவர்களிடம், எவரிடமும் எந்த அசைவுமேயில்லை. சுற்றுச்சூழல் வெகு ரம்யமாக, இதமான காற்றின் தழுவலில், அந்த தியானமையத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தவர்களின் சரீரம் பூராவுமாக அன்னையின் சரணம் மட்டுமே சுழன்றுகொண்டிருந்ததில், பக்தியின் பரவசம் அனைவரையும் தழுவியிருந்தது.

பார்க்கவன் அன்று தன் மனைவியையும், மகனையும், சமையல் செய்யும் மாமியையும் அழைத்து வந்திருந்தார். தியானம் சம்பிரமமாக முடிந்தது. அனைவரின் விழிகளிலும் ஆனந்தபாஷ்பம். அவரின் மகன் பெயர் சாத்வீக்.

பெயருக்கு ஏற்றமாதிரியிருந்த பையன், மாறுபட்டு, கேடுகெட்டு, பரிதவித்து, அலங்கோலமாக வந்து பெற்றவர்களின் அணைப்பில் தன் பயத்தை அணைத்து, 'அன்னையே சரணம்' என சரணாகதியாக வீழ்ந்து கதறிய கதறலில் அவனிடமிருந்த அத்தனை கேடுகெட்டவைகளும் கரைந்தேபோக, புதிய பிறவியாக பிறப்பெடுத்து, பெற்றவர்களின், சமையற்கார மாமியின் ஆதரவான, அனுசரணையான பேச்சிலும், நல்ல ஆகாரத்திலும், இது அத்தனையையும் மீறி, மூலாதாரமான அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் கடாட்சமும், கடைக்கண்ணும் அவன் மீது படர, சாத்வீக் அருமையான பிறவியை மீண்டும் எடுத்தான் என்பதே சரியானதாகும்.

ஒரே மகனைப் பெற்று, அவனை வளர்த்து, அந்த மகன் வழி

தவறி, பாதை மாறிப்போனதில், மனநிம்மதிக்காக அலைந்து, திரிந்து, அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் காலடிகளைப் பற்றிக்கொண்டு, மனம் முழுவதும் அன்னையும், ஸ்ரீ அரவிந்தருமே சஞ்சாரம் செய்ய, மகனின் மீட்பு, அவர்களை சரீரம் பூராவுமே அன்னையை மட்டுமே சுழல வைத்தது என்றால் மிகையேயில்லை.

❀❀❀

ஒரு வாரம் சென்றது. இன்னும் அந்த முதல் தேதியின் சந்தோஷம் அனைவரின் மனதிலும் நிரம்பித் தளும்பியதில், அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையுமே எந்த நேரத்திலும் நினைக்கும்படியாக சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும், பேச்சுக்களும், திடீரென அனைவருமே வீட்டில் தியானத்திற்கு அமர்வதுமாக, வாய் பேச்சுகள் குறைந்து, எல்லா வேலைகளும் சத்தமின்றி, அனாவசியமானவைகள் அண்டாமல், ஓர் அதீதமான மௌனமே கோலோச்சியதுஎன்றால் மிகையாகாது.

இரண்டு நாட்கள் கடந்திருக்குமா? என்றும்போல் அன்றும் சுறுசுறுப்பாக வேலை நடந்துகொண்டிருந்தது. அன்று ஒரு தலைவரின் இறப்பால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறையாகவிருந்ததால், ராமுவும், சீனுவும் தியானமையத்தின் வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு வந்தனர்.

யாரோ கதவைத் தட்டும் சத்தம்.

சட்டென எழுந்த ராமு, யாரென்று பார்த்தான். புரிந்தும், புரியாமலும், ஒரே ஒரு கணத்திற்கும் குறைவான நேரத்தில் யோசித்து, சட்டெனக் கதவைத் திறந்தான். மனம் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் சரணடைந்து, ஸ்திரமாக உட்கார வைத்தது. மௌனமாகவே சென்றான். சட்டெனத் திரும்பினான். வந்தவர் அப்படியே நின்றிருக்க, "உள்ளே வாங்கோ" கூறியவன் மனதில் அன்னையை ஏந்தியபடி உள்ளே சென்றான்.

*தொடரும்...*

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# இப்படியும் உலகில் நடப்பதுண்டா?

முதலாளி, உடன் வேலை செய்பவர், மாமியார், மருமகள், மேலதிகாரி, ஊரில் பெரிய மனிதர் ஒருவரிடம் முறையாக நடக்காத நேரம் பாதிக்கப்பட்டவர் பல வகைகளில் நடப்பதுண்டு. (1) வேறு இடம் போவார்கள், (2) தலைவிதியே என அடங்குவார்கள், (3) முணுமுணுத்துக்கொண்டு வாழ்க்கை ஓடும், (4) எதிர்த்துப் பேசி நடைமுறையில் அடங்குவார்கள், (5) எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவர், தோல்வியடைவர். அன்னை அன்பர்கட்குக் கூறுவது வேறு.

- ✡ ***அவர்கள் நடத்தை நம் மனத்தைப் பிரதிபலிக்கிறது.***
- ✡ ***நம் மனம் மாறினால், அவர்கள் செயல் மாறும்.***

அன்னையை அறிந்ததுமுதல் நான் இக்கொள்கைகளை ஓரளவு பின்பற்றியுள்ளேன். மிகக்கடுமையான கண்டிப்பு, கசப்பான நடைமுறை. இதன் உண்மையை நூற்றுக்கு நூறு என் மனம் அறிந்தது. செயலில் பேர் அளவு வெற்றி கண்டேன். இதன் உண்மை என்ன?

- ✡ **புறம் அகத்தைப் பிரதிபலிக்கிறது.**
- ✡ **எதிரி குதர்க்கமாகப் பேசினால் என் மனம் குதர்க்கமாக இருக்கிறது. நான் குதர்க்கத்தை விட்டுவிட்டேன், என் மனம் விடவில்லை. என் ஜீவியம் விட்டுவிட்டதை, என் பொருள் விட மறுக்கிறது.**
- ✡ **நான் எத்தனையோ விஷயத்தில் கைவிட்டதை ஒரு சில விஷயத்தில் விட முடியவில்லை.**
- ✡ **எல்லா முக்கியக் காரியங்களிலும் நான் கைவிட்ட பழக்கம், எவருக்கும் புண்ணியமில்லாத காரியத்தில் என்னால் விட முடியவில்லைஎன்பதை எதிரியின் செயல் காட்டுகிறது.**
- ✡ **நான் அர்த்தமற்ற செயலில் செய்தது, பெரிய விஷயங்களில் பூதாகாரமாக வருகிறது.**
- ✡ **நான் செயலில் கைவிட்டது, எண்ணத்திலிருக்கிறது.**
- ✡ **நினைத்தேன், அதுவும் வேண்டாம்என கைவிட்டுவிட்டேன். நினைத்தது தவறுஎன முதலாளி செயல் கூறுகிறது.**
- ✡ **நான் எதிர்பார்க்கும் சிறப்புக்கு ஏற்ப நமக்கு உள்ளே சிறப்பு வேண்டும்.**

ஆண்டில் 15 நாள் லீவுண்டு. அதையே ஆபீசில் தர மறுக்கிறார்கள். 5 மணிக்கு அனைவரும் போய்விடுகின்றனர். நான் 8 மணி, 10 மணி வரை வேலை

*(பின் அட்டையில் தொடரும்...)*

# இப்படியும் உலகில் நடப்பதுண்டா?

*(முன் அட்டை தொடர்ச்சி)*

செய்கிறேன். இந்த வீட்டில் ஞாயிற்றுக் கிழமையும் லீவு இல்லை. தீபாவளி போனஸ் கொடுப்பதில்லை. கொடுத்ததை நிறுத்திவிட்டனர். வந்து பல வருஷமாகிறது, பிரமோஷனில்லை, இன்கிரிமெண்ட் இல்லை. என் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கி வைத்துக்கொண்டு, வேறு இடம் போக அனுமதிப்பதில்லை. இல்லாத புகார் கூறுகிறார்கள். யார் முதலாளி என்றில்லாமல் அனைவரும் அதிகாரம் செய்கிறார்கள். 2 பேர் எதிரெதிராக ஆர்டர் கொடுத்தால் எப்படி வேலை செய்வது? இல்லையென்றால் பொறுத்துக் கொள்ளலாம். பாரபட்சம் பொறுக்க முடியவில்லை. குத்தலாக பேசுகிறார்கள், குதர்க்கமாக நடக்கிறார், யார் சொல்வதைக் கேட்டு என்னை வதைக்கிறார்கள். *என்னால் செய்ய முடிந்தது ஒன்றுண்டாஎனக் கேட்கும் நேரம் உண்டு.*

நான் இதை 100 அல்லது 200 பேரிடம் கூறியுள்ளேன். 10 அல்லது 12 பேர் பெரும்பாலும் ஏற்றுப் பயன்பெற்றுள்ளனர். எவரும் சில சமயம் ஏற்றுப் பலன் கண்டிருக்கிறார்கள். அன்னையைப் பெரிதும் ஏற்றுக்கொண்ட ஒருவருக்கு பேரதிஷ்டம் வரும் நேரம் நிலைமை கடுமையாயிற்று. அவருக்கு நான் கூறியது.

> ❀ உங்கள் நிலைமை கடுமையானது. இதே நிலையில் நான் மனம் மாறி பலன் கண்டுள்ளேன். உங்கள் ஆபீசில் இது கஷ்டம். கஷ்டத்தை ஏற்று, மாறினால், பெரும் பலனுண்டு. செய் என நான் கூறமாட்டேன். செய்தால் சிறப்பு.

அன்பர் பெருமுயற்சிசெய்து பெற்றது பெருவிரக்தி. சில ஆண்டுகள் கழித்து மீண்டும் முயன்று பகுதியில் வென்றார். பல மாதம் கழித்து முழுவதும் வெற்றி பெற்றார். எனினும் மழை விட்டாலும் தூவானம் விடவில்லை. அவர் பெற்ற பலன்கள்,

- ✯ ***மனம் பரந்து விரிந்து, அன்னையை அதிர்ஷ்டமாகக் கண்டு, அளவுகடந்து சந்தோஷம் எழுந்தது. அனைவரும் இவர் விஷயத்தில் தலைகீழே மாறிவிட்டனர்.***
- ✯ சம்பளம் இரு மடங்காகவில்லை என்ற குறை நீங்கி, 6 மடங்காயிற்று. 12 மடங்காயிற்றுஎனவும் கூறலாம்.
- ✯ 50 ரூ., 100 ரூ. (tips) பரிசு, 5000 ரூ., 50,000 ரூ.என உயர்ந்து, இலட்ச ரூபாயாயிற்று.
- ✯ ஆழத்தில் மனம் ஏராளமான அமைதியடைந்தது.
- ✯ அதையும் கடந்து அகந்தை எப்படி, யாரை என்ன செய்யலாம்என கருதுவதையும் அறிய முடிந்தது.

❀ ❀ ❀

December 2009 Jiviyam 15 Malar 8
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191